# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஜூலை - 2024

தனிப்பிரதி ரூ.20




# ஜூலை 2 – எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம்



தூத்துக்குடி



தென்சென்னை



கரூர்



சேலம்



செங்கல்பட்டு



அரியலூர்



தென்காசி



வடசென்னை



ஈரோடு




கோவை




தேனி



திருப்பத்தூர்

அரசு ஊழியர்

மாத இதழ்

2024 ஜூலை

மலர்:45 இதழ்:07

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:
மு.அன்பரசு, மு.பாஸ்கரன்,
தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன்,
கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி,
சா.டானியல் ஜெயசிங்,
சா.கோதண்டபாணி, அ.குபேரன்

வரைகலை: கார்ட்டுன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

முகவரி:
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...


1. **மோடி அரசின் மதவெறி, ஊழல் முதல்வரின் நம்பிக்கைத் துரோகம்!**
   *தலைவர் மடல்* ............................4
2. **தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றிட.... மாண்புமிகு முதல்வருக்கு திறந்த மடல்**
   *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து* ............................9
3. **வேர்களின் பணியை விழுதுகள் தொடரும்... விழுதுகள் இறங்கி வேர்கள் படரும்...**............................13
4. **சிவப்புச் சூரியன் ஜோதிபாசு** ............19
5. **வெற்றிக் கொடிகட்டும் பதாகையை இங்கேயே விட்டுச் செல்கிறேன்!** ......................21
6. **மாநிலத் தலைவர் பொறுப்பில் இருந்து விடுவிப்பும் கூடுதல் பொறுப்புத் தலைவர் தேர்வும்** ..........................23
7. **ஆசையாய் ஒரு நாள்** ......................24
8. **ஜூலை 2 எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம்** ................................25
9. **கிருஷ்ணகிரி எழுச்சி நாள் கருத்தரங்கம்** ................................33
10. **பயிற்சி வகுப்பு - திண்டுக்கல்** .........33
11. **வாசகர் கடிதம்**..............................34
12. **நூல் அறிமுகம்**.............................34

தலைவர் மடல்

# ஆ.சு. அப்பன் ஓர் துருவ நட்சத்திரம்

**1. இந்தியா : மோடி அரசின் மதவெறி, ஊழல்**

**மதவெறி**

மோடி மீண்டும் பிரதமராக ஆட்சிப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே ராய்ப்பூர், அலிகார், மண்டாலா, அக்பர் நகர், நாகன், சங்கம்விகார் ஆகிய இடங்களில் இஸ்லாமிய சிறுபான்மை மக்களை குறி வைத்து இந்துத்துவா குண்டர்கள் தாக்குதல் நடந்தியுள்ளனர். எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத இந்த அட்டூழியத்தை ஆர்எஸ்எஸ்-பாஜக கூட்டம் மேலும் தீவிரப்படுத்துகிறது அதை எதிர்த்து நாம் வலுவாகப் போராட வேண்டியுள்ளது.

**ஊழல்**

பிரதமர் மோடியின் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஊழலுக்கு சான்றுகள் ஒவ்வொன்றாக வெளிவரத் துவங்கியுள்ளன. மோடி ஆட்சியில் ரூ.1800 கோடி செலவுசெய்து புதிதாக கட்டப்பட்டு பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்டுள்ள ராமர் கோவிலின் கூரை ஒழுகுகிறது. ராமர் கோவிலுக்கு செல்லும் பாதையை கட்டுவதற்கான செலவினம் ரூ.845 கோடியாகும். ஆனால் அந்தப் பாதை முழுவதும் பெரிய பெரிய பள்ளங்கள் காணப்படுகின்றன. இதனை திறந்து வைத்ததும் பிரதமர் மோடிதான்.

2021ல் மதுராவில் கட்டப்பட்ட பெரிய தண்ணீர் தொட்டி தற்போது இடிந்து விழுந்திருக்கிறது. பல அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் காயமடைந்திருக்கிறார்கள், இது கட்டப்பட்டதிலும் பெரிய ஊழல் நடந்திருப்பது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

தில்லி விமான தளத்தின் டெர்மினல்-1 முறையான பராமரிப்பும் கவனமும் இல்லாததால் சரிந்துள்ளது. தில்லி விமான நிலையத்தைத் தொடர்ந்து குஜராத்தில் ராஜ்கோட் விமான தளத்தின் கூரை சரிந்துள்ளது. இதைக்கட்டுவதற்காக ரூ.450 கோடி செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதனையும் திறந்து வைத்தது நமது பிரதமர் மோடிதான்.

மும்பை அடல் சேது கட்டப்பட்டதும் பாஜக ஆட்சியில்தான். அதில் இப்போது விரிசல்கள் தெரிய ஆரம்பித்துள்ளன. ரூ.17,480 கோடி செலவு செய்து கட்டப்பட்ட அடல்சேதுவை திறந்து வைத்ததும் பாரதப் பிரதமர் மோடிதான். கடந்த 30 நாட்களில் மட்டும் பீகார் மாநிலத்தில் ஆறு பாலங்கள் இடிந்து விழுந்திருக்கின்றன.

**கல்வியிலும் ஊழல்**

மருத்துவப் படிப்பிற்கான நீட் தேர்வுகளில் வினாத்தாள்கள் கசிவது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது இந்த ஆண்டு மிகப்பெரிய அளவில் நடந்துள்ளது என்பது தகுந்த ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மனிதகுலம் செம்மையாக இருப்பதற்கு மருத்துவத்துறை இன்றியமையாததாகும். நீட் போன்ற தேர்வுகள் அதன் தரத்தை வலுவிழக்கச் செய்து பணமுள்ளவர்களும் அதிகாரம் படைத்தவர்களும் மருத்துவத் துறைக்கு தேர்வு செய்யப்படுவது நாடு முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. தேசிய தேர்வு முகமையே வழக்கத்திற்கும் விதிகளுக்கும் மாறாக கருணை மதிப்பெண்

அளித்து நூற்றுக்கும் மேற்பட்ட தகுதியற்ற மாணவர்களை சேர்க்க வழி வகுத்துள்ளது. மருத்துவராக வேண்டும் என்ற எதிர்காலக் கணவோடு பொறுப்புடன் படிக்கும் மாணவர்கள் 650 மதிப்பெண்கள் எடுத்தும் அரசு மருத்துவ கல்லு|ர்ரிகளில் சேரமுடியவில்லை. இந்த வருடம் நீட் தேர்வு முடிவுகள் மாணவர்களையும் பெற்றோர்களையும் நாட்டு மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி யிருக்கிறது. நீட் ஊழலில் பாஜக ஆளும் மாநிலங்களில் உள்ள ஆளும்கட்சி அரசியல் பிரமுகர்களின் செயல்பாடுகள் உள்ளதை ஊடகங்கள் நாள்தோறும் அம்பலப்படுத்தி வருகின்றன. இத்தனைக்குப் பிறகும் மத்திய அரசு நீட் தேர்வை ரத்து செய்ய மறுத்துள்ளது. நீட் தேர்வைத் தொடர்ந்து மருத்துவ மேற்படிப்புக்கான நீட் தேர்வு கடைசி நேரத்தில் ரத்து செய்யப்பட்டு மாற்று தேதி அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பிஜி நீட் தேர்விலும் ஊழல்கள் நடந்திருப்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இதனால் லட்சக்கணக்கான மாணவர்களின் மருத்துவக் கனவுகள் சுக்கு நூறாகியிருக்கின்றன.

நீட் தேர்வு மட்டுமல்லாமல் நெட்தேர்வும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் 9 லட்சத்து 8 ஆயிரத்து 380 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பணம் சம்பாதிக்கும் ஒரு கூட்டத்தை பக்கத்தில் வைத்துக்கொண்டு ஒன்றாம் வகுப்பிலிருந்து முதுகலைபட்டம் வரைக்கும் தேர்வு முகமையை ஆரம்பித்து அதன்மூலம் தேர்வுகள் நடத்தி இதுவரை நடந்து வந்த தேர்வுமுறைகளை சீரழித்து ஊழல் பேர்வழிகளையும் தில்லுமுல்லு செய்பவர்களையும் உருவாக்கி ஒன்றிய அரசு பாதுகாத்து வருகிறது.

2021ல் ஜேஈஈ தேர்வு வினாத்தாள்கள் வெளியானதால் 9,19,008 மாணவர்களும், 2021ல் யுஜிசி நெட் தேர்வுத்தாள் வெளியானதால் 12,67,000 மாணவர்களும், 2021ல் நீட் தேர்வுத்தாள் வெளியானதால் 13,66,000 மாணவர்களும், 2022 நீட் தேர்விலும் ஊழல்கள் நடந்துள்ளதன் காரணமாக 17,64,571 மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அமைப்பு முறையும், தேர்வு நடத்தும் முகமையும் ஊழல் மிகுந்தவை என்பது தெள்ளத் தெளிவாகியுள்ள நிலையில் ஒன்றிய அரசு மத்திய தேர்வு முகமையை கலைத்து விட்டு கல்வியை மாநிலப்பட்டியலில் சேர்த்து மாநில அரசாங்கங்களுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் தேர்வுகள் நடத்த அதிகாரம் வழங்க வேண்டும் என்று குரல்கள் ஓங்கி ஒலிக்கத் துவங்கியுள்ளன. அந்தக்குரல்களுக்கு வலிமை சேர்க்க நாமும் நம்முடைய பங்களிப்பை அளிப்பதன் மூலம் ஊழலற்ற எதிர்காலத்திற்கு வழி ஏற்படுத்த முடியும். எனவே அரசு ஊழியர்கள் நாம் அனைவரும் நீட், நெட் போன்ற தேர்வுகளுக்கு எதிராக நடத்தப்படும் இயக்கங்களுக்கு ஆதரவும் பங்கேற்பும் நல்கி நம்முடைய சமூக அக்கறையை நாட்டுக்கு உணர்த்த வேண்டும்.

**2. தமிழ்நாடு : காத்திருந்தது போதும் களமிறங்குவோம்!**

**வாக்குறுதியும், நம்பிக்கைத் துரோகமும்!**

கடந்த 30.06.2024ஆம் தேதியோடு முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் 26.06.2024ஆம் தேதி மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவது குறித்த அரசின் கொள்கை முடிவு பற்றி பேசியதை நினைவுகூற வேண்டியுள்ளது. “பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு அமைக்கப்பட்ட வல்லுநர் குழு பல்வேறு பணியாளர் சங்கங்களின் கருத்துக்களை கேட்டிருப்பதாகவும் அரசு ஊழியர்-ஆசிரியர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசிற்கு பரிந்துரை வழங்கியுள்ளதாகவும், பழைய ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம்

அளித்துள்ள பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் ஆய்வு செய்து அளித்துள்ள அறிக்கைகளின் மீதான அரசின் கொள்கை முடிவு அரசின் பரிசீலனையில் உள்ளது'' இதே வார்த்தைகள்தான் சென்றவருட சட்டமன்றக் கூட்டத்தொடரிலும் வாசிக்கப்பட்டது.

பழைய ஓய்வுதியத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக 22.02.2016ஆம் தேதி திரு.ஸ்ரீதர் ஐஏஎஸ் அதிகாரி தலைமையில் ஓர் வல்லுநர் குழு தமிழக அரசால் அமைக்கப்பட்டது, ஜெயலலிதா முதல்வராக இருந்துபோது அமைத்த திருமதி சாந்தாஷீலாநாயர் ஐஎஎஸ் தலைமையிலான வல்லுநர் குழுவிற்குப்பிறகு அமைக்கப்பட்ட இந்தக்குழுவின் காலவரம்பு ஏழுமுறை நீட்டிக்கப்பட்ட பிறகு, 27.11.2018 அன்று அன்றைய முதல்வர் திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்களிடம் தன்னுடைய அறிக்கையை அது வழங்கியது.

அந்த அறிக்கையின் மீது திரு, எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தனது பதவிக்காலம் முடியும்வரை எவ்வித நடிவடிக்கையும் எடுக்கவில்லை. அதை பயன்படுத்திக்கொண்ட திமுக, "ஆட்சிக்கு வந்தால் புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்பட்டு பழைய ஓய்வூதியத் திட்டம் கொண்டுவரப்படும்.'' என்று வாக்குறுதி வழங்கியது. அந்த நம்பிக்கை காரணமாக தமிழ்நாட்டில் உள்ள ஒட்டுமொத்த அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் திமுகவிற்கு வாக்களித்து திமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க காரணமாயிருந்தனர்.

அதன்பிறகு இன்றுவரை ஒவ்வொரு ஆண்டும் சட்டசபை கூடும்போதும் 2016ல் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளதாக ஒரு சம்பிரதாய வாக்கியமாக "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்'' எனும் தலைப்பில் கொள்கை விளக்கக் குறிப்பில் "வல்லுநர் குழு அமைத்தல்'' என்ற பிரிவின் கீழ் ஒரு எழுத்துகூட பிசகாமல் அப்படியே தொடர்ந்து அச்சாகி வந்து கொண்டிருக்கிறது.

கொடுக்கின்ற விபரங்களைக் கூட பொய்யாகக் கொடுத்து தன்னை நம்பி வாக்களித்த அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை தொடர்ந்து ஏமாற்றப் பார்க்கிறது இந்த அரசு. ஸ்ரீதர் கமிட்டி கொடுத்த அறிக்கை மதுரை நீதிமன்றத்தில் மூடப்பட்ட உறையில் சமர்ப்பிக்கப்பட்டதும் அதை எடுத்துப்படித்த நீதியரசர். இது என்ன அறிக்கையா அல்லது துண்டுப்பிரசுரமா? எனக்கேட்டதையும் நாம் மறந்துவிட முடியாது. அப்போதே மாண்புமிகு நீதியரசர் அவர்கள் "பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை.'' என்று ஒண்ணேகால் வரியில் முடிக்கப்பட்டிருந்த கடிதத்தை பார்த்து சொன்ன வார்த்தைகள் அது. இது ஐஏஎஸ் அதிகாரி தயாரித்த அறிக்கையா அல்லது அரசு குமாஸ்தா தட்டச்சு செய்துகொடுத்த அறிக்கையா? எனக் கேட்டார். மேலும் பழைய ஓய்வூதியத் திட்டம் சாத்தியமா இல்லையா என்பது குறித்து தெளிவான அறிக்கை வழங்கும்படி கேட்டார். 2017ஆம் ஆண்டில் ஜாக்டோ ஜியோ காலவரையற்ற போராட்டத்தை அறிவித்தபோது செப்டம்பர் 4ஆம் தேதி அன்றைய முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் வெளியிட்ட பத்திரிகை செய்தியில் பழைய ஓய்வுதியத் திட்டத்தினை செயல்படுத்திட வாய்ப்பே இல்லை என தெரிவித்திருந்ததையும் நம்மால் மறக்க முடியாது. "பழைய ஓய்வூதியத் திட்டத்தை திமுக ஆட்சிக்கு வந்தால் கண்டிப்பாக செயல்படுத்துவோம்.'' என்ற பிரச்சாரத்தை வைத்துத்தானே திராவிட முன்னேற்றக் கழகம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓட்டை வாங்கி, பதவியேற்று நான்காவது ஆண்டு நடக்கும்

தருவாயிலும் மீண்டும் மீண்டும் முதுகில் குத்தும் நம்பிக்கைத்துரோக நாடகத்தை தொடர்ந்து நடத்தி வந்து கொண்டிருக்கிறது.

அந்த ஒண்ணேகால் வரி அறிக்கையை வைத்துக்கொண்டு முன்னாள் முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் 5 ஆண்டுகளும் இன்றைய திமுக அரசு முழுமையாக 3 ஆண்டுகளும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை சோதனைப்படுத்தி பார்த்திருக்கிறார்கள். சொல்கின்ற பொய்யை ஒழுங்காக கூட சொல்லாமல் 2018ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அறிக்கை கடந்த நான்கு ஆண்டுகளாக பரிசீலனையில் உள்ளதாக திமுக அரசு கூறிவருவது எத்தனை பெரிய நம்பிக்கை துரோகம்.

இந்த பொய்களுக்கு மணிமகுடமாக நிதியமைச்சர் வாசித்திருக்கும் இன்னொரு பொய் திகழ்கிறது. பழைய ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையத்திற்கு ஒரு பைசா கூட செலுத்தாத, அதில் ஒரு உறுப்பினராகக் கூட இல்லாத தமிழக அரசு, ஆணையம் அளித்துள்ள பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் ஆய்வு செய்வதாகவும், அது அளித்துள்ள அறிக்கைகளின் மீதான அரசின் கொள்கை முடிவு அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது எத்தனை பெரிய பொய், இது யாரை ஏமாற்றுகிற வேலை? ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையத்திற்கும், அதில் உறுப்பினராக இல்லாத ஒரு பைசாகூட ஊழியர்கள் பணத்தை செலுத்தாத தமிழக அரசுக்கும் என்ன தொடர்பு?

அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தொடர்ந்து இவர்கள் சொல்லும் பொய்களை நம்பிக்கொண்டு குனியக் குனியக் குட்டு வாங்கிக் கொண்டிருப்பார்கள் என தமிழக அரசு நினைப்பதன் விளைவுதான் இந்த அறிக்கை. குனிந்தவன் எப்போதுமே குனிந்து கொண்டிருக்கமாட்டான் என்பதையும் குனிந்தவன் நிமர்ந்தால் இந்தக் குவளயமே தாங்காது என்பதையும் இந்த அரசு கூடிய விரைவில் உணரும். அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு உறுதியளித்த முதல்வர், நிச்சயமாக செய்வேன் என்று மீண்டும் மீண்டும் உறுதியளித்ததை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் தர ஒப்புக்கொண்ட உரிமைகளை தரமறுத்து நயவஞ்சக வாக்குறுதிகளால் நம்ப வைக்கும் வேலை இனியும் நடக்காமல் இருக்க அரசாங்கத்திடம் பழைய ஓய்வூதியத் திட்ட அறிவிப்பு எப்போது வரும் என்கிற காலவரையை நாம் கேட்டுப் பெற வேண்டும்.

கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என வாக்குறுதி அளித்து தேர்தலில் வெற்றி பெற்ற உடனேயே ஜார்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் இமாசலப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்கள் பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொடுத்து வாக்குறுதிக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தியுள்ளன. தேர்தலுக்கு முன்னதாகவே ராஜஸ்தான் மாநிலம் பழைய ஓய்வூதித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்து அதை அரசிதழிலும் வெளியிட்டது. மேலும் சென்ற ஆண்டில் கர்நாடகாவில் வெற்றி பெற்ற காங்கிரஸ் அரசு கூட பழைய ஓய்வுதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அரசாணையை வெளியிட்டுவிட்டது. ஆனால் தமிழ்நாடு அரசு மட்டும் கொடுத்த வாக்குறுதியை கொஞ்சம் கூட மதிக்காமல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை தொடர்ந்து அவமானப்படுத்தும் வேலையை செய்து வருவது உண்மையில் இந்த அரசுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தினை அமல்படுத்துவதில் விருப்பமில்லை என்பதையே தெள்ளத் தெளிவாக காட்டுகிறது. சில இடைத்தேர்தல்களில் வெற்றிபெறுவதாலும்,

நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது வென்றதாலும் மகளிருக்கு சில சலுகைகளை அறிவித்துவிடுவதாலும் தமிழக முதல்வர் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை, கண்டிப்பாக செய்து தருவேன் என்று உறுதி கூறிய கோரிக்கைகளை நிறைவேற்றாமல் விட்டுவிடலாம் என்றும், அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஆதரவும், வாக்குகளும் இல்லாமலேயே அடுத்தடுத்த தேர்தல்களிலும் வெற்றி பெற்று விடலாம் என்கிற நினைப்புக்கு வந்துவிட்டாரேயானால் அந்த நினைப்பே இந்த ஆட்சியின் வீழ்ச்சிக்கு முதல்படியாக இருக்கும் என்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அன்புடன் எச்சரிக்க கடமைப்பட்டுள்ளது.

உங்களுக்கு ஆதாரம் வேண்டுமானால் 2003ஆம் ஆண்டு அரசு ஊழியர் ஆசிரியர்கள் காலவரையற்ற போராட்டத்திற்கு பிறகு நடந்த 2006 தேர்தலில் தன்னை யாருமே வெற்றிகொள்ள முடியாது என்ற மமதையோடு இருந்த செல்வி ஜெயலலிதா ஆட்சியை வீழ்த்திக்காட்டியது அரசு ஊழியர் ஆசிரியர்கள் படைதான். அதன்பிறகு கடந்த தேர்தலில் அரசு ஊழியர்களை துச்சமென நினைத்த திரு.எடப்பாடி பழனிச்சாமியின் அரசாங்கத்தை வெட்டி வீழ்த்தியதும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தாம் என்பதை அன்புடன் இந்த அரசுக்கு நினைவுகூற கடமைப்பட்டுள்ளோம்.

21 ஆண்டுகளாக தொடர்ந்து பழைய ஓய்வூதியத் திட்டத்திற்காக போராடிக் கொண்டிருக்கும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் போராட்டங்களை எந்த நம்பிக்கை துரோகங்களாலும் வீழ்த்திவிட முடியாது என்பதை இனிவரும் போராட்டங்களும், போர்க்களங்களும், தேர்தல் முடிவுகளும் காட்டும், நம்பிக்கை துரோகத்திற்கும் நயவஞ்சகத்திற்கும் நமது போராட்டங்கள் பாடம் கற்பிக்கும். அரசு ஊழியர்கள் எப்போதும் பணிந்தும், வளைந்தும் இருக்க மாட்டார்கள் என்பதும் அவர்கள் நம்பிக்கை துரோகத்திற்கு முடிவுரை எழுத வெகுண்டெழுந்தால் போராட்டம் எனும் வெற்றி வாளால் எத்தனை துரோகத்தையும் சாணக்கியத்தனத்தையும் தூக்கியெறிவார்கள் என்பதை நாளைய வரலாறு இன்னொரு முறை நெறிபிறழ்ந்த ஆட்சியாளர்களுக்கு நிரூபிக்கும்.

நம்பிக்கையோடு நாம் இவ்வளவுநாள் காத்திருந்தது போதும். தொடரும் நம்பிக்கை துரோகங்களுக்கு உறுதி மிக்க போராட்டங்கள், இயக்கங்கள் மூலம் பாடம் கற்பிக்க களமிறங்குவோம். ஒன்றுபட்ட உறுதியான போராட்டங்கள் மூலம் நமக்கான உரிமைகளை நாம் வென்று காட்டுவோம்!●

**சூடா ஒரு கோப்பை சூப்**

## எது முக்கியம்?

பெரிய சிறகுள்ள
பறவைகள்தான்
பறக்கமுடியும் என்பதில்லை,
ஒரே வானில்தான்
பருந்தும், குருவியும்,
வல்லூறும் பறக்கிறது.

அதனதன் சிறகுகள்
அதனதற்கு.

பறவையாக இருப்பதுதான்
முக்கியமே அன்றி
எவ்வளவு பெரிய பறவையாய்
இருக்கிறோம் என்பதில்லை!

- எஸ். இராமகிருஷ்ணன்

# தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றிட... மாண்புமிகு முதல்வருக்கு திறந்த மடல்

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 01.04.2003 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய ஓய்வூதியத் (பங்களிப்பு ஓய்வூதியம்)திட்டத்தை ரத்து செய்துவிட்டு ஏற்கனவே நடைமுறையில் இருந்த பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி 20 ஆண்டுகளுக்குமேல் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் போராடி வருகிறது.

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி 2016ஆம் ஆண்டில் அரசு ஊழியர், ஆசிரியர்கள் நடத்திய வீரம் செறிந்த காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தின் காரணமாக கடந்த அ.தி.மு.க அரசு சட்டமன்றத்தில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்த வழிவகைகளை ஆராய வல்லுநர் குழு அமைத்தது. பல்வேறு மாற்றங்களுக்கு மத்தியில் அக்குழுவின் அறிக்கை தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. 2016ல் சமர்ப்பிக்கப்பட்ட வல்லுநர் குழு தனது அறிக்கையினை அரசுக்கு அளித்திடவும், அதன் மீது அரசு தனது முடிவை தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவே நடைபெற்ற போராட்டங்களின் நிர்பந்தம் காரணமாக வல்லுநர் குழு அறிக்கை 2018ல் அரசுக்கு அளிக்கப்பட்டது. அதன் மீதான அரசின் முடிவு இதுநாள் வரை வெளியிடப்படவில்லை. வல்லுநர் குழு அறிக்கையும் அதன் மீதான அரசின் முடிவும் அறிவிக்கப்படாத நிலையில் அன்றைய முதலமைச்சர் திரு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்ய முடியாது என்று சட்டத்திற்கு புறம்பாக அறிவித்தார். வல்லுநர் குழு அமைக்கப்பட்டதே அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோபத்தை திசை திருப்புவதற்கே என்பது அரசின் அன்றைய அறிவிப்பின் மூலம் அறிய முடிந்தது. பழைய பென்சன் திட்டத்தை கொண்டு வருவதை ஊழியர்களின் சமூக பாதுகாப்பு சார்ந்த பிரச்சினையாக பார்க்காமல் அரசு ஊழியர்களின் பொருளாதாரக் கோரிக்கைகளாக மட்டுமே பார்ப்பதால் இக்கோரிக்கை தீர்க்கப்படாமல் உள்ளது. அதன் வெளிப்பாடுதான் கடந்த 2024 ஜுன் 26 சட்டமன்றத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது குறித்து அரசின் கொள்கை முடிவு பற்றி பேசும்போது பழைய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அமைக்கப்பட்ட வல்லுநர் குழு பல்வேறு சங்கங்களின் கருத்துக்களை கேட்டிருப்பதாகவும் PFRDA அளித்துள்ள பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் ஆய்வு செய்து அளித்துள்ள அறிக்கைகளின் மீதான அரசின் கொள்கை முடிவு என்றும், அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் கூறுகிறார். அதாவது சென்ற ஆண்டு இதே வார்த்தையை சட்டமன்றத்தில் அப்படியே ஒரு எழுத்துக்கூட பிசகாமல் பேசியுள்ளார்.

ஏற்கனவே ஜாக்டோ-ஜியோவின் சார்பாக சென்ற ஆண்டு மூன்று அமைச்சர்கள் கொண்ட குழுவிடம் பேசிய பொழுது ஏற்கனவே அ.தி.மு.க. அரசு இருக்கும்போது போடப்பட்ட வல்லுநர் குழு எங்களுக்கு எந்த பலனும் தராது. எனவே அந்த குழு குறித்து பேச வேண்டியதில்லை. தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொன்னது போல்

பழைய பென்சனை செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம். 1991ல் அறிமுகப்படுத்தப்பட்ட தாராளமயம், தனியார்மயம், உலகமயக் கொள்கைகளினால் உழைப்பாளி மக்களின் சமூக நல சேமிப்புகளின் மீது கார்ப்பரேட் கம்பெனிகள் கொள்ளை அடிக்க தாராளமாக அனுமதிக்கப்பட்டது. அத்தாக்குதல்களின் ஒன்றே பென்சன் தரும் நடைமுறையை மாற்றி புதிய பென்சன் திட்டத்தை கொண்டு வந்து பென்சனுக்காக வைக்கப்பட்டிருந்த தொகை பல லட்சம் கோடி ரிலையன்ஸ் மற்றும் ICICI Lumbard ஆகிய தனியார் கம்பெனிகளுக்கு மடைமாற்றம் செய்யப்பட்டது. உழைப்பாளி மக்களின் இந்த வாழ்வாதார சேமிப்பை கொள்ளை அடிக்கவே PFRDA ACT முன் மொழியப்பட்டது. 10 ஆண்டுகளுக்குமேல் ஊழியர்களின் தொடர் போராட்டத்தால் சட்டமாக்கப்படாமல் இருந்த சட்டம் பி.ஜே.பி., காங்கிரஸ் கட்சிகளின் ஆதரவால் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது தமிழக கட்சிகள் தி.மு.க. ஆதரித்தும், அ.தி.மு.க. எதிர்த்தும் வாக்களித்தனர். இந்த சட்டத்தை எதிர்த்த அ.தி.மு.க. இன்றைக்கு தேர்தல் அறிக்கையில் கூட புதிய பென்சன் ரத்து என்று சொல்லவில்லை. இதுதான் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் நிலை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

உலக சுகாதார நிறுவனம் சில அம்சங்களை வரையறுத்துள்ளது. போதிய வருமானம், கல்வி, சத்துணவு, சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் குடிநீர், அடிப்படை சுகாதார வசதிகள் மற்றும் சேவைகள் போன்ற அம்சங்களை உருவாக்குவது ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் அதிமுக்கிய கடமையாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் உழைக்கின்ற அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் வேலை செய்கின்ற அனைவருக்கும் தரமான வேலையும் அதன் மூலம் வாழ்க்கை ஊதியமும் (Living Wage) பெற்றிடவும், ஓய்வின் முழு சுகத்தையும் அனுபவித்திடக்கூடிய ஒரு தரமான வாழ்க்கையினை உத்திரவாதப்படுததக் கூடிய மற்றும் சமூக கலாச்சார வாய்ப்புகளை முழுமையாக அனுபவிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் தக்க சட்டம் இயற்றுதல் அல்லது பொருளாதார நிறுவனங்கள் அல்லது வேறு பல வழிகளின் மூலம் வழங்கப்பட அரசு கடுமையாக முயற்சிக்க வேண்டுமென வலியுறுத்துகிறது. ஆனால் நாடு விடுதலை அடைந்து 76 ஆண்டுகள் கடந்த நிலையிலும் 10% மக்களுக்குக்கூட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான வாழ்நிலையை இதுவரை ஆண்ட அரசுகள் உத்திரவாதப்படுத்தவில்லை. சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு நிதி ஒதுக்குதல், நிதி நிலை கடும் பற்றாக்குறை ஏற்படுகிறது என கூறி போராடிப் பெற்றிருக்கக்கூடிய ஓய்வூதியத்தை ரத்து செய்வது ஒரு ஜனநாயக அரசின் ஏற்கத்தக்க நடவடிக்கையல்ல என்பதால் தொடர்ந்து நாம் போராடி வருகிறோம்.

“எல்லா மனிதர்களும் சுதந்திரமாகவும், கண்ணியத்துடனும், சம உரிமையுடனும் வாழ உரிமை உடையவர்கள் “ என 1948 டிசம்பர் 10ல் ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச மனித உரிமை பிரகடனத்தை வெளியிடடது.

அது மட்டுமல்ல. உச்ச நீதி மன்றத்தின் நீதியரசர் Y.V. சந்திரசூட் தலைமையில் 5 நீதிபதிகள் அமர்வும் ஓய்வூதியத்தை ரத்து செய்தது, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 14க்கு எதிரானது என்று தீர்ப்பளித்து ஓய்வூதியம் என்பது தானமோ, தர்மமோ அல்ல . விருப்பப்பட்டு வழங்கப்படும் வெகுமதியோஅல்ல. அவர்களது பணிக்காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட கொடுபடா ஊதியம்தான் என்றும் அரசு ஊழியர் பணியாற்றிய காலத்தில் இருந்த அதே கண்ணியத்தோடும் தன்மானத்தோடும் ஓய்வுக்கு பின்னரும் வாழ வழிவகை செய்திட வழங்கப்படுவதுதான் ஓய்வூதியம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசின் கொள்கை முடிவில் நீதிமன்றம் தலையிட முடியுமா ? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. பொதுவாக அரசின் கொள்கை முடிவுகளில் நீதி மன்றம் தலையிட முடியாது என்பது உண்மைதான். ஆனால் அரசின் கொள்கை முடிவானது அரசியல் நிர்ணயச் சட்டம் மற்றும் இதர சட்டங்களுக்கு முரணாக இருந்தால் அவை செல்லாதது

அல்ல எனவும், அப்பிரச்சனைகளில் நீதி மன்றம் தலையிட முடியும் எனவும் உச்ச நீதி மன்றம் பல தீர்ப்புகளில் குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA) குறித்த மசோதா நிறைவேற்றப்பட்டிருந்தாலும் ஓய்வூதியத்தை தனியார் மயமாக்குவது என்பது சட்ட விரோதமான நடவடிக்கையாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம் என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 01.04.2003 முதல் புதிய பென்சன் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 6,14,175 பேர் சேர்ந்துள்ளனர். ஊழியர்களின் பணம் வட்டியுடன் 73,974 கோடி ரூபாய் LICயில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கென விதிகள் உருவாக்கப்படாத நிலையில் வட்டியுடன் சேர்த்து ஒட்டுமொத்த தொகையாக வழங்கப்படுகிறது. 31.05.2024 வரை பணி ஓய்வு / இறப்பு / பணி துறப்பு / பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் இறுதி தொகை கோரி 38129 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு செய்யப்பட்டவர்கள் 37.095 பேர்.

புதிய ஓய்வூதியத் திட்டத்தை மாநில அரசு விரும்பினால் அமுல்படுத்தலாம். இத்திட்டத்தை அமுல்படுத்துவது மாநில அரசுக்கு கட்டாயமில்லை என்றும், அது மாநில அரசின் விருப்பம் சார்ந்தது என்றும் NS சட்டத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மேற்கு வங்க அரசாங்கம் புதிய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்தவில்லை.

பழைய ஓய்வூதயத் திட்டத்தில் 01.04.2003க்கு முன் பணியமர்த்தப்பட்டவர்கள் 31.05.2024ல் 2.29.525 ஊழியர்கள் உள்ளனர். 2023-24ஆம் ஆண்டு ஓய்வு பெற்றவர்கள் 23792 பேர். ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் எண்ணிக்கை 6,97,239பேர் . ஓய்வூதிய செலவு அதிகரித்ததிற்கு காரணம் அரசு ஊழியர் ஓய்வு பெறும் வயதை உயர்த்தியதால் என்று தமிழக அரசு கூறுகிறது. புதிய ஓய்வூதியத்தின்படி அரசின் பங்குத்தொகை 10% பழைய ஓய்வூதியத் திட்டத்தின்படி ஓய்வூதியம் ஒரே நேரத்தில் மாநில அரசு வழங்க வேண்டியிருப்பதால் ஒட்டுமொத்த ஓய்வூதிய செலவுத் தொகை குறையாது. மாறாக கூடுதலாகும் என்று 22.01.2007ல் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டில் மேற்கு வங்க அரசு கூறியுள்ளது நினைவில் கொள்ள வேண்டியுள்ளது.

எனவே புதிய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவதால் பழைய ஓய்வூதியத்திற்கான செலவு 2047ஆம் ஆண்டு முதல் தான் குறையும் என்றும் 2053ஆம் ஆண்டு தான் பழைய ஓய்வூதிய திட்டச் செலவு இல்லாத ஆண்டாக மாறும் என்று சங்கங்களின் சார்பாக அரசுக்கு ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம்.

தமிழ்நாட்டை பொறுத்தவரையில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை தமிழகத்தில் அமல்படுத்துவதால் 40 ஆண்டுகளுக்கு மாநில அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்படும். இது அரசுக்கு இரட்டை செலவாக இருக்கும் என்பது உண்மை. மாநில அரசுக்கு செலவாகும் இந்த இரட்டை செலவை மத்திய அரசு ஈடுகட்டாது. மாநில அரசே ஈடு கட்டிக்கொள்ள வேண்டும் என்பது நிதர்சனமான உண்மையாகும். இருப்பினும் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தை அரசு செலவினமாக பார்ப்பது சேமநல அரசு என்ற கோட்பாட்டிற்கு எதிரானதாகும் என்பதை தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு ஏற்கனவே எந்தவிதமான பாதுகாப்பும் அற்ற புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்திட வேண்டும் என வலியுறுத்தி கடந்த 10 ஆண்டுகளாக இருந்த அ.தி.மு.க. அரசு எங்களது நியாயமான கோரிக்கையை தீர்க்கவில்லை. மேலும் சட்டமன்றத்தில் அறிவித்த கோரிக்கை நிறைவேற்றப்படாத சூழலில் தொடர்ச்சியான போராட்டத்தை நடத்திய பிறகும் கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் அரசு ஊழியர், ஆசிரியர்களின் பெரும் எதிர்ப்பார்ப்புடன் அறுதி பெரும்பான்மையுடன் தி.மு.க.

தலைமையிலான ஆட்சி அமைய பெற்றது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சி இருந்த போது நடைபெற்ற பாராளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தலில் நம்முடன் நின்று நமக்காக அறிக்கை விட்டதோடு மட்டுமல்லாமல் தி.மு.க. ஆட்சி கட்டிலில் அமர்ந்ததும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோரிக்கைகளான பழைய பென்சன், சிறப்பு காலமுறை ஊதியம் / தொகுப்பூதியம் பெறக்கூடிய ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம், சாலைப்பணியாளர்களின் 41மாத பணிக்காலமாக்குதல், 21 மாத நிலுவை ஊதியம், முடக்கப்பட்ட சரண் விடுப்பு, காலிப்பணியிடம் நிரப்புதல், ஒப்பந்த முறை, அவுட்சோர்சிங் முறை ஒழிக்கப்படும் உள்ளிட்ட உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று சொன்ன அப்பொழுது தி.மு.க. தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவராகவும் இருந்த திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சட்டமன்ற தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்து கிட்டதட்ட மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளது பெருத்த ஏமாற்றத்தை எற்படுத்தியுள்ளது.

இந்த ஆட்சி மாற்றத்தில் அரசு ஊழியர், ஆசிரியர்கள் முக்கிய பங்காற்றினார்கள் என்பதை நமது சங்க மாநில மாநாட்டிலும், ஜாக்டோ-ஜியோ மாநாட்டிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியுள்ளார். அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தேர்தல் காலத்தில் சொன்னது மறுக்கவில்லை, மறக்கவில்லை என்றும் குறிப்பாக பழைய பென்சன் வழங்கப்படும் என தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டும், தேர்தல் பரப்புரையிலும் நிறைவேற்றப்படும் என்றும் கூறினார்.

கடந்தமூன்று ஆண்டுகளுக்கு மேலாக அகவிலைப்படி தவிர வேறு எந்த கோரிக்கையும் தமிழக அரசு நிறைவேற்றப்படவில்லை. ஆனால் தேர்தல் அறிக்கையில் கொடுத்துள்ள வாக்குறுதிகளில் 85% நிறைவேற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசு ஊழியர், ஆசிரியர் வாழ்வாதார கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. அதற்கு மாறாக அனைத்துறைளிலும் காலிப்பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார்வசம் ஒப்படைக்கும் அரசு ஆணைகள் வெளி வந்துக்கொண்டிருக்கிறது. (உ.த.) காலை உணவுத் திட்டம் தனியார்மயம், சாலை பராமரிப்பு பணிகள் தனியார்மயம்) ஏற்னவே டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த கருணை அடிப்படை பணி நியமனம் 25% லிருந்து தற்பொழுது 5% குறைக்கப்பட்டுள்ளது மிகபெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதுபோல் மக்கள் நலத் திட்டங்களில் சிறந்து விளங்குகிறது தமிழ்நாடு என்றும் இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்றும் ஏன் வெளி நாடுகளில் கூட தமிழ்நாட்டின் மக்கள் நலத் திட்டங்களை பாராட்டு பெற்று வருகிறது என்று தமிழக அரசு கூறுகின்றது. ஆனால் தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசு அலுவலகங்களில் பணியிடம் நிரப்பப்படாததால் அதிக பணிப்பளு, விடுமுறை நாட்களிலும் பணி நேரத்திற்கு பின்பும் ஆய்வு கூட்டங்கள் சாத்தியமற்ற குறியீடுகள் திணிப்பது ஆகிய காரணங்களினால் ஊழியர்கள் மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளாகி நோயாளியாக மாறக்கூடிய நிலையில் ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

எனவே, இந்தியாவில் ராஜஸ்தான், சத்தீஸ்கர், இமாச்சலபிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தங்களது ஊழியர்களுக்கு புதிய பென்சன் திட்டத்தை கைவிட்டு பழைய பென்சன் திட்டத்தினை அமுல்படுத்தியுள்ளனர். இச்சூழ்நிலையில் மாநில அரசுக்கு நன்மை பயக்காத புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து, தேர்தல் கால வாக்குறுதியான பழைய ஓய்வூதியத் திட்டத்தை அறிவிக்க வேண்டும். இல்லையென்றால் எங்களது வாழ்வாதார கோரிக்கைகளுக்காக எங்கள் கையில் உரிமைகளை மீட்டெடுக்கும் வரை ஓய்வறியா போராட்டங்கள் எங்களுக்கு இருக்கிற ஒரே வழியாகும் என்பதை தமிழக முதலமைச்சருக்கு இந்த மடல் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். ●

# வேர்களின் பணியை விழுதுகள் தொடரும்... விழுதுகள் இறங்கி வேர்கள் படரும்...

**- இரா.சீனிவாசன்**

தோழர் ஆர்.எம்.எஸ். மறைந்து 8 ஆண்டுகள் கடந்து போயுள்ளது என என்னும்போது ஆச்சரியமாக உள்ளது. இன்றும் அவர் ஏதோ ஒரு மாநிலம் சென்று இருப்பதாகவே உணர்கின்றேன். ஏனெனில் இன்றளவும் உள்ள ஒவ்வொரு நிகழ்வுகளிலும் அவரது ஆளுமை உள்ளதாகவே கருதுகின்றேன். 1988ம் ஆண்டு நடைபெற்ற அரசு ஊழியர் ஆசிரியர்களின் போராட்ட காலத்தில் போதுதான் நான் அவரை சந்தித்தேன்.

தமிழகம் முழுவதும் அரசு ஊழியர் ஆசிரியர்களின் எழுச்சிமிக்க போராட்டத்தை தமது இலக்கிய பேச்சாற்றலால் தட்டி எழுப்பிக் கொண்டிருந்த தலைவர்களில் ஒருவராக தோழர்.இரா.முத்துசுந்தரம் என்ற ஆர்.எம்.எஸ். அவர்களை சென்னை தேனாம்பேட்டை டி.எம்.எஸ். வளாகத்தில் நடைபெற்ற வேலை நிறுத்த பிரச்சார கூட்டத்தின்போது சந்தித்தேன். வெள்ளை நிற பேண்ட் மற்றும் சட்டை அணிந்து எளிமையான உருவம், ஆனால் கணீர் குரல் கொண்டு அன்றைய மத்திய, மாநில ஆட்சியாளர்களின் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுடனான அணுகுமுறையும், அன்றைய NGO சங்கத்தின் செயல்பாடுகளையும், அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் நிலைமையினையும் புராணங்கள் மற்றும் இதிகாசங்களிலிருந்தும், இலக்கியங்களிலிருந்தும் உரையாற்றிய நிகழ்வு இன்றளவும் என் கண்ணிலும், காதுகளிலும் ஒ(ளி)லித்து கொண்டிருக்கிறது.

1988க்குப் பிறகு தோழர் ஆர்.எம். எஸ்சுடன் நெருங்கிப் பழக கூடிய வாய்ப்பு என்பது 2002ம் ஆண்டிலிருந்துதான் கிடைக்கப் பெற்றேன். அப்போது முதல் அவருடைய பேச்சில் மட்டுமல்ல தொழிற்சங்கத்தில் தலைமையேற்று நடத்துகிறவர்கள் எவ்வாறெல்லாம் ஒழுக்க நெறியுடன் இருக்க வேண்டும் என்பதையும் கற்றுக் கொடுத்தவர்.குறிப்பாக நிதி மேலாண்மையில் அவரது கறார் தன்மை தன்னிலிருந்து துவங்கி, தன்னுடன் செயல்படும் சக நிர்வாகிகளும் ஒழுக்க நெறியுடன் இருந்திடுவதை வலியுறுத்துவார். சங்கத்தின் பொது நிதியிலிருந்து தேநீர் அருந்துவதை கூட தவிர்த்திடுவார். அவருடன் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பல்வேறு நிகழ்வுக்காக சென்று வந்துள்ளேன். அப்போதெல்லாம் கூட்டங்களில் வழங்கப்படும் தேநீர் மற்றும் உணவுக்கான செலவினங்கள் அல்லாமல் எந்த நிலையிலும் சங்கப் பணத்தை தவிர்த்து தமது சொந்த பணத்திலேயே உணவு, தேநீர், ஆட்டோ உள்ளிட்ட செலவினங்களை செய்து கொள்வார், இதற்காக தமது மகனிடம் மாதாமாதம் ஒரு தொகையினை பெற்று செலவிடுவார்.

1984ல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் துவங்கிய போது சங்கத்தில் நிதி ஆதாரம் என்பதே இல்லாத காலகட்டமாகும். அக்காலகட்டத்தில் தமிழகம் முழுவதும் தமது சொந்த பணத்திலேயே பயணம் செய்து ஸ்தாபனத்தை நிலை நிறுத்திய தலைவர்களாக பலரும் இருந்தனர்.

அவர்களில் ஒருவராக தோழர் ஆர். எம்.எஸ் இருந்தார். 1988, 2002 மற்றும் 2003ம் ஆண்டுகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களினால் சங்கத்தின் தலைவர்கள் முதல் முன்னோடிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் அனைவரும் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஊதிய இழப்பு, ஆண்டு ஊதிய உயர்வு வெட்டு, விடுப்பின்மையால் பல மாதங்கள் ஊதியம் இழந்தும் உள்ளனர். 2003ம் ஆண்டு வேலை நிறுத்த காலத்தில் ஊதியத்தை இழந்தபோது இந்திய நாடு முழுவதும் உள்ள அரசு ஊழியர்கள், தமிழக அரசு ஊழியர் ஆசிரியர்களின் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தது மட்டுமல்லாது தாராளமான நிதி உதவியும் வழங்கினர். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் அறைகூவலினை ஏற்று காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உழைப்பாளி மக்கள் ஆதரவு நல்கினர். அப்போது மேற்குவங்கம், கேரளா, திரிபுரா, ஆந்திரா, மகாராஷ்ட்ரா, ஒடிசா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்கள் தாராளமான நிதியினை வாரி வழங்கினர். அந்நிதியினை சேகரிப்பதற்காக தோழர். ஆர்.எம்.எஸ். அவர்களை அம்மாநில அரசு ஊழியர் சங்கங்கள் நேரில் அழைத்து நிதி வழங்கினர். அவ்வாறு பெறப்பட்ட நிதியினை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தலைவர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாது போராட்ட களத்தில் இறுதி வரை துணை நின்ற தலைமைச்செயலக ஊழியர்கள், ஆசிரியர்கள் என பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மாதந்தோறும் குறிப்பிட்ட தொகையினை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மூலமாக வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட தொகை தோழர் ஆர்.எம்.எஸ்க்கும் வழங்கப்பட்டது. பின்னர் தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு சிறைச்சாலையில் இருந்த நாட்கள் உள்ளிட்ட போராட்ட கால அனைத்து நாட்களும் பணிக்காலமாக அறிவிக்கப்பட்டு உரிய ஊதியம் அனைத்து அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது. அது போன்று தோழர் ஆர்.எம்.எஸ் க்கும் பணி நாட்களாக கருதி வழங்கப்பட்ட ஊதியத்தை சங்கத்திற்கே திரும்ப வழங்கிய நிகழ்வு இன்னும் என் மனதில் பெருமிதத்துடன் நினைவு கூறுகின்ற நிகழ்வாக உள்ளது. தோழர். ஆர்.எம்.எஸ். பொதுச்செயலாளராக இருந்த கால கட்டத்தில் தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் உறுப்பினர் சேர்க்கை ஒரு லட்சத்திற்கும் மேலாக உயர்ந்தது. அதே போன்று அரசு ஊழியர் இதழ் சந்தாதாரர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்தது. மேலும் சங்கத்தின் எதிர்கால தேவைக்கான நிதியும் இக்கால கட்டத்தில்தான் உயர்ந்தது. தமது சொந்த குடும்பத்திற்கு என நிதி ஆதாரத்தை உயர்த்திக் கொள்ளவில்லை, மாறாக தான் நேசித்த, உயிர் மூச்சாய் கருதிய ஊழியர்களின் உரிமைகள் பாதுகாத்திட வலுவான அமைப்பிற்கு நிதி ஆதாரத்தையும் உயர்த்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

**அகில இந்திய அளவில் தோழர் ஆர்.எம்.எஸ்.**

இந்திய துணைக் கண்டத்தின் பரந்த விரிந்த பகுதிகளான ஸ்ரீநகர் முதல் கன்னியாகுமரி வரை தோழர். ஆர்.எம். எஸ்சுடன் பயணித்துள்ளேன். அவருக்கு விமானப் பயணம் செல்ல சங்கம் அனுமதித்திருந்தாலும் அவர் ரயில் பயணத்தைதான் விரும்புவார். சங்கத்திற்கு செலவினத்தை ஏற்படுத்தக் கூடாது என்பதில் கவனத்துடன் இருந்தார். வட மாநிலங்களில் கடுமையான குளிர் காலத்திலும் கூட இரயில் பயணத்தைதான் விரும்புவார். தேசிய செயற்குழு அனைத்திலும் பங்கேற்றுள்ளார். தேசிய செயற்குழு கூட்டங்களில் உரையாற்றுகின்றபோது சர்வதேச, தேசிய அளவிலான பொருளாதார அரசியல் மற்றும் ஆட்சியாளர்களின் கொள்கைகள் குறித்து

எளிமையாக பிறர் புரிந்து கொள்ளும்படி உரையாற்றுவார்.

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் ஸ்தாபகத் தலைவர்களான தோழர்கள் சுகுமான் சென், அஜய் முகாபாத்யாயா (மேற்கு வங்கம்), ஆர். ஜி.கார்னிக் (மகாராஷ்ட்டிரம்) உள்ளிட்ட பல்வேறு மாநில தலைவர்களின் அன்பை பெற்றவர் தோழர் ஆர்.எம்.எஸ். ஆவார்.

தோழர் ஆர்.எம்.எஸ். சமயநல்லூர் அரசுப் பள்ளியில் படிக்கும் போதே அனைத்து பாடங்களிலும் முதன்மையான மாணவராக இருந்துள்ளார். சாதி, மத வேறுபாடின்றி அனைத்து மாணவர்களுடனும் சகஜமாக பழகும் பண்பு கொண்டவராகவும் இருந்துள்ளார். அவரது ஆசிரியர்களில் திருமதி.ஜேம்ஸ் என்ற டீச்சர் இவரிடத்தில் மிகவும் அன்பாகவும், சமூகத்தில் உள்ள சாதி, மத ஏற்றத்தாழ்வுகளும் அதன் கொடுமைகள் குறித்தும் விரிவாக பேசுவாராம். இதன் காரணமாகவே தமக்கு பூணூல் அணிகின்ற சம்பிரதாய சடங்கினை ஏற்றுக் கொள்ளாமல் தம் வாழ்நாள் முழுவதும் கடைபிடித்துள்ளார். சிறு வயதிலேயே புத்தகம் வாசிக்கும் வழக்கத்தினை கொண்டுள்ளார். தமது பாட்டியிடம் பணம் பெற்று நிறைய புத்தகங்கள் வாங்கி வாசிக்கும் வழக்கத்தினை கொண்டிருந்தார். பள்ளி இறுதி வகுப்பு முடித்து, மதுரை கல்லூரியில் பி.யூ.சி. படித்துவிட்டு பி.எஸ்ஸி. முதலாமாண்டு சேர்ந்த சில நாட்களிலேயே சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக தமிழக அரசின் கல்வித்துறையில் ஈரோடு மாவட்டத்தில் சூளகிரி ரேஞ்சில் உள்ள உதவி கல்வி அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் தமது 21ம் வயதில் (1973) சேர்ந்துள்ளார்.

தோழர் ஆர்.எம்.எஸ். புத்தக வாசிப்பு வழக்கம் உள்ளவர். அதனால் அன்றைய பொதுஉடமை கருத்துக்களைக் கொண்ட புத்தகங்களை குறைந்த விலையில் வெளியிட்டு வந்த NCBH நிறுவனத்தின் புத்தகங்கள் இவரது வீட்டில் ஏராளமாக இருக்கும். நெருக்கடிகால கட்டத்தில் கம்யூனிச கருத்துகள் கொண்ட புத்தகங்களை மத்திய அரசால் தடை செய்யப்பட்டது. தோழர்.ஆர்.எம்.எஸ். ஒரு நாள் அலுவலகம் சென்றிருந்தபோது காவல் துறையினர் இவரது வீட்டிற்கு வந்து சோதனை செய்து, வீட்டில் இருந்த புத்தகங்கள் அனைத்தையும் கொண்டு சென்றனர். அப்போது திருமணம் ஆகி சில மாதங்களே ஆன நிலையில் தோழர்.உஷாராணி அவர்கள் கடுமையாக ஆட்சேபித்து காவல்துறையினரை வெளியேற்றியுள்ளார். தோழர்.ஆர்.எம். எஸ். அவர்களை நக்சல்களுடன் தொடர்பு உள்ளதாக கருதி காவல் துறையினர் கடுமையாக துன்புறுத்தியும் உள்ளனர். பின்னர் அரசு ஊழியர் என்ற காரணத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தம் வாழ்நாள் முழுவதும் புத்தகம் வாசிப்பது, புதுப்புது தகவல்களை அறிந்து கொள்வது, தாம் கற்றதை தொழிற்சங்க மேடைகளின் வாயிலாக பிறர்க்கு எடுத்துரைப்பதும், போதிப்பதும் மிகவும் விருப்பமாகவே மேற்கொண்டிருந்தார். அவருக்கும் ஓர் ஆசை இருந்தது. அதாவது தாம் ஏதேனும் ஒரு கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது தமது உயிர் பிரிய வேண்டும். அந்த அளவிற்கு தாம் கற்றதை பிறர்க்கு எடுத்துரைத்திடவே விரும்பியுள்ளார். தமது உடல்நலம் குறித்தோ அல்லது தமக்கென ஒரு வீடு உள்ளிட்ட வசதி வாய்ப்புகள் வேண்டும் என எதிர்பார்த்திடாத தோழராவார்.

**தோழர். ஆர்.எம்.எஸ் –ன் வாசிப்பு திறன்**

பெரும்பாலும் அவரது வெளியூர் பயணங்கள் இரயில்/ பேருந்துகளில் சாதாரண வகுப்புகளில்தான் செல்வார்.

அவ்வாறு செல்கின்ற போது ஏதேனும் ஒரு புத்தகம் கையில் இருக்கும். குறிப்பாக புதுதில்லி/கொல்கத்தா போன்ற தொலை தூர பயணங்களின்போது கொண்டு செல்கின்ற புத்தகங்களை குறைந்தபட்சம் 400 பக்கங்கள் கொண்டதாயினும் படித்து முடித்து விடுவார். மிக வேகமாக வாசிக்கும் திறன் கொண்டவராவார். தாம் படித்தது மட்டுமல்லாது என்னைப்போன்றோர் உடன் வருகின்ற போது படித்த அப்புத்தகத்தில் உள்ள விவரங்களை நமக்கு எடுத்துரைப்பார். அது என்னைப் போன்றோர்க்கு நாம் படித்த திருப்தி ஏற்படுத்தி விடும். அவரது வாசிப்பும், புத்தகத்தில் உள்ள கருத்துக்களை உள்வாங்குவதிலும் உள்ள வேகம் அபாரமானதாக இருக்கும். குறிப்பாக.. 2008ம் ஆண்டில் மத்திய அரசின் ஊதியக்குழு அறிக்கை முதன்முதலாக மத்திய அரசின் இணையதளத்தில் வெளியிடப்பட்டது. இத்தகவல் அறிந்த உடனே என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மத்திய அரசின் அந்த அறிக்கையினை பிரிண்ட் எடுத்து தருமாறு கேட்டுக்கொண்டார். தற்போது உள்ளது போன்று அல்ல அன்றைய காலத்தில் இணையதளத்தின் வேகமும் குறைவு, பிரிண்டரின் தரம் மற்றும் வேகமும் குறைவாக இருந்தது. இருப்பினும் மத்திய அரசின் ஊதியக்குழு அறிக்கை ஏறத்தாழ 4 வால்யூம்களில் மட்டும் சுமார் 1000க்கும் மேற்பட்ட பக்கங்களை கொண்டிருந்தது. இதனை பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுத்து பின்னர் பைண்டிங் செய்து தோழர். ஆர்.எம்.எஸ்.சிடம் ஒப்படைக்கின்றபோது இரவு 10 மணிக்கும் மேலானது. அப்புத்தகத்தை அன்றைய இரவிலேயே படித்து முடித்துவிட்டு காலையில் அன்று மையத்தில் இருந்த மாநில நிர்வாகிகளுக்கு அந்த அறிக்கையின் அனைத்து சாதக, பாதக் அம்சங்களை எடுத்துரைத்த நிகழ்வு இன்றளவும் என் நினைவில் உயிரோடி கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு விரைவான வாசிப்பும், புரிதலும் தோழர். ஆர்.எம்.எஸ்.இடம் இருந்தது கண்டு வியப்படைந்தேன்.

**கோரிக்கைகள் வடிவமைக்கின்ற போது...**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வலிமை என்பது கோரிக்கையினை வடிவமைப்பதும், கோரிக்கைகளை வென்றெடுத்திட நடத்தப்படும் இயக்கங்களும், வியூகமும்தான் முக்கியமானதாக இருக்கும். அதன்படி கடந்த இரண்டு ஊதியக்குழு மாற்றத்திற்கான கோரிக்கை சாசனம் தயாரித்தபோது தோழர்.ஆர்.எம்.எஸ்.ன் பங்களிப்பு மகத்துவமானதாகும். மத்திய அரசின் ஊதியக்குழு அறிக்கையின்படியும், மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றும் ஊழியர்களின் பணி நிலைமைக்கு ஏற்றாற்போல் முரண்பாடில்லாத கோரிக்கைகளை வடிவமைத்திட்டார். கிராமத்தின் கடைக்கோடியில் உள்ள வருவாய் கிராம கடைநிலை ஊழியர் முதல், தலைமைச் செயலகத்தில் உள்ள அலுவலர்கள் வரையிலான ஊதிய திருத்த கோரிக்கை முரண்பாடின்றி அமைப்பது என்பது சாதாரண பணியல்ல. அதே சமயத்தில் வைக்கப்படும் கோரிக்கைகள் விஞ்ஞான ரீதியாக, சமூக, பொருளாதார, நிர்வாகம் மற்றும் உழைப்பாளி மக்களின் ஒத்த கருத்துடனும் முன்வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடுவார். இக்கோரிக்கைகளை ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதெல்லாம் குறித்து கவலைப்படாமல் ஊழியர்களின் நலன் சார்ந்து இருந்திட வேண்டும் என்பதுவே அவரது நோக்கமாக இருக்கும். மேலும், ஓய்வூதியம் குறித்த மத்திய, மாநில அரசுகளின் நிலைப்பாடுகள் பற்றி கடுமையாக விமர்சிப்பது மட்டுமல்லாது, ஓய்வூதியம் குறித்த வரலாற்று பின்புலம்,

உலக நாடுகளில் உருவான சூழல் உள்ளிட்ட தகவல்களை சேகரித்து கடைக்கோடியில் உள்ள ஊழியர்க்கும் கொண்டு சென்ற பெருமை தோழர். ஆர்.எம்.எஸ்.க்கு உண்டு. இன்று புதிய ஓய்வூதியம் குறித்த அபாயங்களை பல சங்கங்களும் பேசி வருகின்றனர். புதிய ஓய்வூதியத்தின் அபாயங்களை தமிழகம் மட்டுமல்லாது, அகில இந்திய அளவில் பல்வேறு மாநிலங்களிலும் விரிவாக எடுத்துரைத்தவர் தோழர்.ஆர்.எம்.எஸ். என்றால் மிகையாகாது.

**பிறதுறை ஊழியர்கள், சங்கங்கள் மற்றும் அரசின் உயர் அலுவலர்களுடனும், ஆட்சியாளர்களிடத்திலும் தோழர் ஆர்.எம்.எஸ்.ன் ஆளுமை....**

தோழர் ஆர்.எம்.எஸ். அவர்கள் பல்வேறு துறை சங்கங்களின் மாநாடுகளில் பங்கேற்று சிறப்புரை, வாழ்த்துரை மற்றும் நிறைவுரையாற்றியும் உள்ளார். அவர் எந்த மாநாட்டிற்கு செல்வதற்கும் முன்னதாக அத்துறை ஊழியர்களின் வாழ்வாதாரமான கோரிக்கைகளை கேட்டறிந்து கொள்வார். மேலும் அக்கோரிக்கைகள் குறித்து அத்துறை மற்றும் அரசுத்துறைகளின் நிலைபாடுகளையும் அறிந்து கொண்டு தமது உரையின் போது அக்கோரிக்கைகளின் நியாயங்களையும், அதனால் அரசு மற்றும் பொதுமக்களுக்கான பலன்களையும் எடுத்துரைப்பார். அம்மாநாடுகளில் அத்துறையின் உயர் அலுவலர்களும், சில நேரங்களில் அமைச்சர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றபோது அத்துறை ஊழியர்களின் மனதில் உள்ள அத்தனை எதிர்பார்ப்புகளும் தோழர் ஆர்.எம்.எஸ். வாயிலாக பல்லாயிரக்கணக்கான துறை ஊழியர்கள் சார்பில் அத்துறையின் உயர் அலுவலர்களிடத்திலும், அமைச்சரிடத்திலும் முன் வைத்து உரையாற்றுவது அத்துறை ஊழியர்களிடத்தில் மனநிறைவு பெற்றிருப்பதை கண்டிருக்கின்றேன்.

குறிப்பாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 8ம் மாநில மாநாட்டின் பொது மாநாடு நிகழ்ச்சி சென்னை ஐலேண்ட் கிரவுண்டில் நடைபெற்றது. அதில் அன்றைய தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். முன்னதாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் பிரதிநிதிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கி பேசினார். அத்தீர்மானங்களில் ஒன்றான சத்துணவு ஊழியர்களின் வாழ்வாதாரமான காலமுறை ஊதியம் வழங்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்திவிட்டு, சத்துணவு மையங்களில் சமைக்கப்படும் உணவுகளுக்கான எரிப்பொருள் மான்யம் அரசால் மிகக்குறைவாக வழங்கப்படுவதையும், அம்மான்யத்தை உயர்த்தி தரவேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்து ஜகன்மோகினி என்ற திரைப்படத்தில் வரும் பூதங்களைப் போன்றா எங்கள் சத்துணவு ஊழியர்கள் தங்களது காலினை விறகாக வைத்து சமைக்க முடியும் என தனக்கே உரிய பாணியில் கணீர் குரலில் ஆர்.எம்.எஸ். பேசிய போது கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் மத்தியில் கரவொலி எழுந்ததை கண்டு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே அதனை ரசித்தது மட்டுமல்ல அம்மேடையிலேயே சத்துணவு மையங்களில் சமைப்பதற்கான எரிபொருள் மான்யத்தை உயர்த்தியும் அறிவித்தது இன்றும் மனதில் நிழலாடிக்கொண்டிருக்கிறது.

அதே போன்று, தோழர்.ஆர்.எம்.எஸ். அவர்கள் பொதுச் செயலாளராக இருந்த கால கட்டத்தில் பல்வேறு துறைகளில் / மாவட்டங்களில் பணியாற்றிய அரசு உயர் அலுவலர்களான திருமதி.மாலதி, இ.ஆ.ப., ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., ஷீலா ப்ரியா, .ஆ.ப., திரு.ஞானதேசிகன், இ.ஆ.ப., திருமதி.குத்சியா காந்தி,

இ.ஆ.ப., திரு.வெங்கட்ராமன், இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களும், நீதித்துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சமூக நலத்துறை, மருத்துவம், சுகாதாரத்துறை, கல்வித்துறை, வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நுட்ப பயிற்சித் துறை போன்ற முக்கியமான துறை தலைமை அலுவலர்களும் தோழர் ஆர்.எம்.எஸ்.சின் அணுகுமுறை கண்டு, ஊழியர்களின் இடமாறுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை எடுத்துரைத்து தீர்வு காண மேற்கொள்ளும் விவாதங்களும் மற்றும் முயற்சியைக் கண்டும் நான் வியந்துள்ளேன்.

அதே சமயத்தில் தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களுக்கு பணி ஓய்வு பெறுகின்ற சில தினங்களில் அரசிதழ்பெற்ற அலுவலர் பதவியான பார்சார் என்ற பதவி உயர்வுக்கான கோப்பு அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை செயலாளர் அவர்களிடம் இருந்தபோது, தமக்காக என அரசின் உயர் அலுவலர்களை சந்தித்து முறையிட விரும்பாமல், அப்பதவி உயர்வு பெறாமலேயே அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற்றதை எண்ணும்போது அரசுப் பணியின் இறுதிகாலம் வரை தன்னலமற்ற தியாக உணர்வோடு தோழர்.ஆர்.எம்.எஸ். இருந்துள்ளார் என்பதை பெருமிதத்துடன் நினைவு கூறுகின்றேன்.

**சமூக அக்கறையுடன்..**

இளம் வயதிலேயே சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள் குறித்து அக்கறை கொண்டவராக இருந்ததினாலேயே தமது தொழிற்சங்க பணி காலத்திலும் சாதி மறுப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற பிரச்சினைகளில், பிரச்சாரங்களிலும், போராட்ட நடவடிக்கைகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். மேலும் தமது மகனுக்கு சாதி மறுப்பு திருமணத்தை நடத்தி வைத்தவரும் ஆவார். அவரது 40 ஆண்டுகால தொழிற்சங்க பணிகளில் அவரால் வழிகாட்டப்பட்டு பல்வேறு தொழிற்சங்கத்தின் நிலைகளில் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், மாதர்கள், வாலிபர்கள், முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் என ஏராளமானோரின் நினைவிலும், மனதிலும் ஆழமாய் பதிந்துள்ளார். இன்னும் பல்லாயிரக்கணக்கானோர்க்கு மாபெரும் ஈர்ப்பு சக்தியாய், வழிகாட்டி ஒளிவிளக்காய் இருந்து வருகிறார்.

“வேரின் பணியை விழுதுகள் தொடரும் விழுதுகள் இறங்கி வேர்கள் படரும்" "மத நம்பிக்கையுள்ள ஓர் இந்துவுக்கு காசி/ இராமேசுவரம் போல ஒரு கிறித்துவருக்கு ஜெருசேலம் போல ஒரு இஸ்லாமியருக்கு மெக்கா போல இந்திய உழைப்பாளி மக்களுக்கு மிகவும் புனிதமானது. இந்த வெண்மணி நினைவாலயம் ஆகும்" அதே போன்று ஜனநாயக உரிமைகளை காத்திட..'அடிமைப்படுத்த முற்படும் விதிகளை அப்புறப்படுத்துவதற்கான ஆவேசமான போராட்டங்களுக்கு ஆயத்தமாவோம்"

“நாம் நடத்துகின்ற போராட்டங்கள் எல்லோரும் எல்லாம் பெறக்கூடிய சுரண்டலற்ற சமுதாய அமைப்பான சோசலிச சமுதாயமே உழைப்பாளி மக்களின் வாழ்க்கையிலே விடியலைக் கொண்டு வரும்" "நமது இலக்குகள் தொட்டுவிடும் தொலைவில் இல்லை என்பதையும் இலக்குகளை அடைவதற்கான நமது இயக்கங்கள் மேலும்.. மேலும்.. பரவலாகவும், கூர்மையாகவும் முன்னெடுத்துச் செல்ல வேண்டியவையாக உள்ளன” என்ற அவரது வார்த்தை நினைவுகளுடன் நிறைவு செய்கிறேன்.

*(அ.தி.அன்பழகனின் இலட்சியத் தலைவன் இலட்சத்தில் ஒருவன் என்ற நூலிலிருந்து) ஜூலை 29 தோழர் RMS நினைவுதினம்.* ●



# சிவப்புச் சூரியன் ஜோதிபாசு

– பெரணமல்லூர் சேகரன்

ஜோதிபாசு என்ற பெயரைச் சொன்னாலே, அச்சம் அல்லது பெருமிதம் கொள்பவர்கள்தாம் உண்டு. இன்று தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு அவரது பெயரிடப்பட்டு உலாவருவதைப் பார்க்கலாம்.

கொல்கத்தாவில் கடந்த 1914ம் ஆண்டு ஜூலை 8ம் தேதி அன்று ஜோதிபாசு பிறந்தார். அவரது தந்தை நிஷிகந்தா பாசு, ஒரு டாக்டர். தாயார் பெயர் ஹேமலதா. மிகவும் கட்டுப் பெட்டியான குடும்பத்தில் பிறந்த ஜோதிபாசு, 1920 ம் ஆண்டு கொல்கத்தாவில் உள்ள லொரெட்டோ பள்ளியில் சேர்க்கப்பட்டார். பள்ளிக் கல்வியை கொல்கத்தாவில் முடித்த அவர், 1935 ம் ஆண்டு பாரிஸ்டர்' (வக்கீல்) பட்டம் படிப்பதற்காக லண்டன் சென்றார். அந்தச் சமயத்தில், இந்திய சுதந்திரப் போராட்டம் தீவிரமாக நடந்தது. எனவே, லண்டனில் இருந்தபடியே அங்கிருந்த இந்திய மாணவர்களுடன் இணைந்து ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஜோதிபாசு போராடினார். அதன் தொடர்ச்சியாக, இங்கிலாந்தில் உள்ள கம்யூனிச தலைவர்களின் நெருக்கம் அவருக்குக் கிடைத்தது. ரஜினி பாமிதத் உள்ளிட்ட தலைவர்களின் வழியில் கம்யூனிஸ்டு பாதையில் நடக்க ஆரம்பித்தார். ஜோதிபாசு தன் வாழ்நாளில் அடக்குமுறைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர் கொண்டிருக்கிறார். "இழப்பதற்கு எதுவும் இல்லை அடிமை விலங்கைத் தவிர'' என்ற மார்க்சின் பெருமைமிகு வரிகள் ஜோதிபாசுவின் குடும்பச் சூழலில் பொருந்துவதில்லை. ஆனால் பாசு கம்யூனிஸ்ட் இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்ட நிலையில், இ.எம்.எஸ், சுர்ஜித், பி.சுந்தரய்யா, பி.ராமமூர்த்தி போன்ற தலைவர்கள் அனைவருமே அது போன்ற வசதியான வாழ்க்கையை உதறிவிட்டு வந்தவர்கள. தேசிய இயக்கத்தின் ஈர்ப்பு ஒரு பக்கம் இருந்தாலும், நேதாஜி குறிப்பிட்ட முள் படுக்கையைத் தேர்ந்தெடுக்க இத்தகையத் தலைவர்களின் அர்ப்பணிப்பு உணர்வு இளம் தலைமுறை கற்றுத்தேற வேண்டிய ஒன்று.

ஒருமுறை பாட்னா ரயில் நிலையத்தில் ஜோதிபாசு வந்திறங்கியபோது நக்சலைட் தீவிரவாதி ஒருவன் அவரைத் துப்பாக்கியால் சுட்டான். குண்டு குறிதவறி அவரது பக்கத்திலிருந்த ஒரு எல்.ஐ.சி. தோழர் மீது பாய்ந்தது. அந்தச் சமயம் எதற்கும் அஞ்சாமல் பதற்றமடையாமல் இருந்தார் ஜோதிபாசு. அவர் ஓடி ஒளியவில்லை. 'அவனைப் பிடியுங்கள்' என்று அந்த மனிதனைப் பார்த்து கையைக் காட்டினார். அத்தகைய சூழ்நிலையில் இப்படிப்பட்ட துணிச்சல் வெகு சிலருக்கே இருப்பதுண்டு. 1946ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியின்போது நடந்த வங்காள சட்டசபை தேர்தலில், ரயில்வே தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். முதன் முதலில் களம் கண்ட தேர்தலில் வெற்றி வாகை சூடினார். அன்றிலிருந்து 2001 ம் ஆண்டு வரை மேற்கு வங்காள சட்டசபைக்குள போட்டியிட்டு தொடர்ந்து வெற்றி பெற்று வந்தார். இடையே, 1972 ம்

ஆண்டு மட்டும் தோல்வியடைந்தார். 1962ம் ஆண்டில் சீனாவில் போர் நடந்தபோது கொள்கை ரீதியாக கம்யூனிஸ்டு கட்சியில் பிளவு ஏற்பட்டது. அப்போது, அவர் சிறையில் இருந்தார். பின்னர், இந்திய கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றியதும் அதில் அவர் இணைந்தார். இந்தியாவிலும் சரி, மேற்கு வங்காளத்திலும் சரி மார்க்சிஸ்ட் கட்சியை நிலை நிறுத்திய முக்கியத் தலைவர்களில் அவரும் ஒருவர். 1989ம் ஆண்டிலும், 1996 ம் ஆண்டிலும் காங்கிரஸ் மற்றும் பா.ஜனதா அல்லாத ஆட்சி மத்தியில் வரும் அளவுக்கு அரசியலில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வந்தவர் ஜோதிபாசு என்றால் அது மிகையாகாது.

மார்க்சிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ மற்றும் மத்திய கமிட்டியில் உறுப்பினராகத் தொடர்ந்து நீடித்து வந்தார். 2000 ம் ஆண்டில் உடல் நலக்குறைவு காரணமாக பொலிட்பீரோ பதவியிலிருந்து அவர் விலகினாலும், கட்சி விடவில்லை. எனவே, கட்சியின் வற்புறுத்தல் காரணமாக 2008 ம் ஆண்டு வரை கட்சிப் பொறுப்பில் நீடித்தார்.

1969-75 காலகட்டத்தில் இந்திராகாந்தி ஏவிய அரைப் பாசிச அடக்குமுறைக்கும், 1975-77 காலகட்டத்தின் நெருக்கடி நிலைக் கொடுங்கோன்மைக்கும் முகங்கொடுத்து இயக்கத்தை கட்டிக் காத்தவர் ஜோதிபாசு. 1977 நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் தோற்ற பின், அதே ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் இடது முன்னணி வெற்றி பெற்றது. ஜோதிபாசு முதல்வராகப் பொறுப்பேற்றார். 1977 முதல், 2000ம் ஆண்டுவரை இடைவெளியே இல்லாமல் தொடர்ந்து 23 ஆண்டு காலம், மேற்கு வங்காள முதல் மந்திரியாக இருந்தார். இந்தியாவில் யாருமே இவ்வளவு நீண்ட காலம் முதல் மந்திரியாக இருந்தது கிடையாது. மேலும், தொடர்ந்து 23 ஆண்டு காலம் பதவியில் இருந்ததும் கிடையாது. அத்தகைய அபூர்வ சாதனையை ஜோதிபாசு நடத்திக் காட்டினார். 1996ம் ஆண்டில் காங்கிரஸ் மற்றும் பா.ஜனதா ஆகிய இரண்டு கட்சிகளும் அல்லாத புதிய ஆட்சி அமையும் சூழ்நிலை மத்தியில் உருவானது.

அப்போது, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் தலைவர்கள் கூடி விவாதித்தனர். வி.பி.சிங் உள்பட பல்வேறு தலைவர்களின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட நிலையில், மார்க்சிஸ்ட்கட்சித் தலைமையிலேயே ஆட்சி அமைக்கலாம் என்றும், ஜோதிபாசு பிரதமராகலாம் என்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் முடிவு செய்தனர். கட்சி பாகுபாடின்றி ஜோதிபாசுவுக்கு ஆதரவு பெருகியது. ஆனால், கூட்டணி ஆட்சிக்குத் தலைமை ஏற்பதில்லை' என்ற கொள்கையைப் பின்பற்றி வருவதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு எடுத்த அந்த முடிவால், ஜோதிபாசு பிரதமராகும் வாய்ப்பு நழுவியது.மார்க்சிஸ்ட் கட்சியின் முடிவை ஏற்றுக் கொண்டார் ஜோதிபாசு.

இந்தியாவின் கீழ்வானில் உதித்து, மார்க்சிஸ்ட் கட்சியை இந்தியாவின் தலைமை பீடத்தின் அருகில் வரை அழைத்துச் சென்ற சிவப்பு சூரியன்' பிறந்த தினம் ஜூலை 8. ●

## "பஞ்ச்"

**மொரப்பா**

**முன்பெல்லாம்**
**இயல்பாக இருப்போம்...**
**நடிப்பது சிரமமாக**
**இருந்தது.**

**இப்போது எல்லோருமே**
**நடிக்கிறோம்...**
**இயல்பாக இருப்பது**
**சிரமமாக இருக்கிறது.**

**- பாஸ்கர். எம்**

கட்டுரை

# வெற்றிக் கொடிகட்டும் பதாகையை இங்கேயே விட்டுச் செல்கிறேன்!

**- மு.அன்பரசு**

அன்பார்ந்த தோழமைகளுக்கு நெஞ்சார்ந்த வணக்கங்கள்...!

எத்தனையோ கூட்டங்களில் பங்கேற்றிருக்கிறேன். எத்தனையோ அரங்கங்களில் பேசியிருக்கிறேன். எத்தனையோ மேடைகளில் அமர்ந்திருக்கிறேன், ஆனால் அவற்றிலிருந்தெல்லாம் முற்றிலும் மாறுபட்ட நிகழ்வாக இந்த மாநில செயற்குழு எனக்கு தெரிகிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற கம்பீரமும், போர்க்குணமும், அஞ்சாநெஞ்சமும் கொண்ட போர்ப்படையில் அரசு ஊழியராக பணியேற்று ஐந்தே மாதங்கள் முடிந்திருந்த எனக்கு 19.08.1985 அன்று வட்டக்கிளை இணைச் செயலாளராக பொறுப்பு தரப்பட்டது. இயக்கத்தில் ஒரு தோழனாக இணைந்து, பல படிகளைத் தாண்டி தலைமை பொறுப்புக்கு முன்னேறி, 39 ஆண்டுகள் கடந்த நிலையில் 19.8.2024 அன்று அரசுப்பணியில் இருந்து தன் விருப்ப ஓய்வில் செல்லவிருப்பதால் சங்க பொறுப்புகளில் இருந்து என்னை விடுவித்துக்கொள்ளக்கூடிய நேரம் வந்து விட்டதை உணரும் போது, நெஞ்சம் கணக்கிறது.

உள்ளம் இன்னும்கூட இளமையாகத்தான் இருக்கிறது. ஆனால் உடல் அதற்கு இணையாக ஒத்துழைக்க முடியாமல் தவிக்கிறது. ஏற்றுக்கொண்ட கடமைகளையும் பொறுப்புகளையும் செவ்வனே நிறைவேற்றும் நாளை மட்டுமே எண்ணி இருந்துவிட்ட எனக்கு கோரிக்கைகள் நிறைவேறும் நாள் வரை காத்திருந்து அதை உங்கள் அனைவரோடும் உரிமையோடு பகிர்ந்து கொள்ள முடியாமலேயே போகிறேனே என்ற வருத்தம் எனக்கு உள்ளது. உடல்நலக்குறைவோடு இந்த சங்கத்தின் உன்னத பொறுப்புகளை நான் தூக்க முடியாமல் தூக்கிச் சுமந்து சங்கச் செயல்பாடுகளின் வீரியத்தை நான் குறைத்து உங்களை வருத்தப்பட வைத்துவிடுவேனோ என்ற அச்சமும் எனக்குள்ளது.

நமக்கான உரிமைகளுக்காக இருபதாண்டுகளுக்கும் மேலாக நாம் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கும் நிலையில் அதை பெற்றுத்தரும் வரையாவது இந்த இயக்கத்தில் என்னுடைய முழுமையான பங்களிப்பை செலுத்த வேண்டும் என்ற என்னுடைய உறுதிப்பாட்டை, மருத்துவரின் கண்டிப்பான அறிவுரைகளும், குடும்பத்தினரின் கண்ணீர்மல்கும் வற்புறுத்தல்களும் சுக்குநூறாக்கி விட்டன. மட்டுமல்லாமல் என்னுடைய மனசாட்சியும், என்னுடைய உடல்நலக்குறைவு சங்கத்தின் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் வேகத்தை குறைத்துவிடும் என்பதின் காரணமாகவும் நான் என்னுடைய சங்கப் பொறுப்புகளை அற்புதமான என் போர்ப்படை தளபதிகளிடம் ஒப்படைத்துவிடுவதுதான் சாலச் சிறந்தது என்று எண்ணியிருக்கிறேன்,

நீங்கள் எனக்கு வழங்கிய பொறுப்பில் நான் ஓரளவுக்கேனும் செயல்பட்டிருக்கிறேன் என்று நீங்கள் நினைத்தால் அது எல்லாம் நீங்கள் அனைவரும் இந்த இயக்கித்தின் பாலும் என்மீதும் கொண்டிருந்த நம்பிக்கையும், மாறாத அன்பும் என்பதை நான் பெருமையுடன் நினைவுகூற கடமைப் பட்டிருக்கிறேன். நம் சங்கத்தின் முன்னோடிகளாகவும், தீர்க்கதரிசிகளாகவும் விளங்கியவர்களும், தங்கள் மறைவுக்குப் பின்னரும் நம் நினைவில் வாழ்ந்துகொண்டிருக்கிற தோழர்கள் எம். ஆர். அப்பன். ஆர். முத்து சுந்தரம் போன்றவர்களின் நேரடிக் கண்காணிப்பில் பயிற்சி பெறும் வாய்ப்பை நான் பெற்றது என் வாழ்நாளில்

மறக்க முடியாத தருணங்களாகும். அவர்கள் சொல்வழி. செயல்வழி இச்சங்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற உந்துதலில் நான் ஓரளவுக்கேனும் வெற்றி பெற்றிருக்கிறேன் என்றே நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள துறைவாரிச் சங்கங்களை ஒன்றிணைத்து செயல்படக்கூடிய ஒரு பொது இயக்கமாக செயல்படக்கூடிய அமைப்புகளில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எப்போதுமே முதன்மையானதாக இருப்பதற்குக் காரணம் அப்பழுக்கற்ற தலைவர்களின் அர்ப்பணிப்பான சங்க செயல்பாடுகளும், அஞ்சா நெஞ்சமும், பணத்துக்கோ, பதவிக்கோ, அச்சுறுத்தல்களுக்கோ வளைந்து கொடுக்காமல் எடுத்த முடிவில் கடைசிவரை நின்று போராடி வெற்றிபெறும் தனித்தன்மையும்தான்.

அரசு ஊழியர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எந்த அரசாங்கமும் எடுத்துவிட முடியாத அளவுக்கு அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருக்கும் இயக்கமாக, போராடிக் கொண்டிருக்கும் அமைப்பாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த அமைப்பின் பெரும்சாதனையாக ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பை ஒருங்கிணைத்து வலுப்படுத்தி அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கோரிக்கைகளை உரிமைகளை இன்றளவும் உயிர்ப்பாக வைத்திருக்கிறோம் என்றால் அதற்கான அதிகபட்ச உழைப்பினையும் முயற்சிகளையும் மேற்கொண்டது நமது இயக்கம்தான் என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன்.

இந்த இயக்கம் எந்த ஒரு தனி மனிதனையும் சார்ந்திருக்கவில்லை என்பதை நான் உணர்ந்தே இருக்கிறேன். அந்தந்த காலகட்டங்களில் அதற்கான தலைவர்கள் தோன்றி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வார்கள் என்ற வரலாறு நம் இயக்கத்திற்கு உண்டு. இந்த அன்பரசு தான் தூக்கியிருந்த பதாகையை கீழே இறக்கி வைத்துவிட்டான் என்பதற்காக இந்த இயக்கம் பலவீனப்பட்டு போய்விடாது. இந்த அன்பரசுவை விட வேகமும் விவேகமும் உள்ள இளைஞர்கள் யுவதிகள் பட்டாளம் நம்மிடம் இருக்கிறது. நான் இறக்கி வைத்திருக்கும் பதாகையை அவர்களில் தகுதியானவர்கள் யாராவது எடுத்து உயர்த்திப் பிடிப்பார்கள் என்ற உறுதியும், வருங்கால இளைய தலைமுறையினர் இப்போதுள்ளதைவிட இந்த இயக்கத்தை இன்னும் சிறப்பாக வழிநடத்துவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்குள்ளது. அந்த நம்பிக்கையின் பேரில்தான் நான் என்னுடைய பதாகையை இங்கே விட்டுச் செல்கிறேன். குறித்த காலத்தில் தகுதியானவர்களின் கைகளில் சென்று சேரும் என்பதில் எனக்கு எந்த ஐயப்பாடும் இல்லை,

சில சுயநலங்களும், சில துரோகங்களும், சில தனிப்பட்ட மனிதர்களின் சீழ்பிடித்த சித்தாந்தங்களும், ஆட்சியாளர்களோடு சிலர் கொண்டிருந்த சுயநல நெருக்கங்களுமே அவர்களிடமிருந்து பிரிந்து வந்து இந்த இயக்கம் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது. அதன் பிறகு இந்த இயக்கம் அரசு ஊழியர்களுக்காக மட்டுமல்லாமல் அனைத்து சமுதாய பிரச்சனைகளுக்காக குரல் கொடுக்க ஆரம்பித்து இன்று வரை அது தொய்வில்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. எதிர்வரும் காலங்களிலும் ஆட்சியாளர்களாலும்/ அதிகார வர்க்கத்தினராலும் அல்லது அடக்குமுறைகள் எந்த ரூபத்தில் வந்தாலும் உறுதியுடன் எதிர்கொண்டு சங்கத்தை காப்பதிலும் உரிமைகளை மீட்டிடநாம் அனைவரும் எப்போதும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். சாதி, மத, இன உணர்வுகளுக்கு இடம் கொடுக்காமல் சங்கத்தை நாம் பொதுப்படையாக நேர்மையாக நடத்தி செல்ல வேண்டும்.

நாம் இங்கு ஒன்றுகூடியிருப்பது அரசு ஊழியர்கள் என்ற வர்க்கத்தின் உரிமைகளுக்காகவும், நலன்களுக்காகவும். அதை நாம் வென்றெடுக்க வேண்டும் என்றால் நமக்குள் ஒற்றுமை அவசியம் வேண்டும். அனைவரும் ஒற்றுமையுடன் போராடினால்தான் வெற்றி நிச்சயம் என்கிற நிலையில் நமக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை வேற்றுமைகளை அவ்வப்போது களைந்து சங்கத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்வதில் நாம் கவனம் செலுத்த

வேண்டும், அணி திரட்டப்பட்ட அரசு ஊழியர் வர்க்கம் உறுதிமிக்க போராட்டங்களில் ஈடுபடுவதன் மூலம் மட்டுமே நாம் நம் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதில் நான் அசையா நம்பிக்கை கொண்டிருக்கிறேன், கடந்த காலங்களில் யார் யாரெல்லாம் போரோடினார்களோ அவர்கள் எல்லாம் முன்னேறினார்கள். உரிமைகளைப் பெற்றார்கள். அதை நம்முடைய இயக்கம் தொடர்ந்து செய்தால்தான் நம் உரிமைகள் நம் வசப்படும். இந்த இயக்கத்தின் மாநில மாவட்ட பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், முன்னணித் தோழர்கள் அனைவரும் போர்க்குணமிக்க போராளிகள். அவர்கள் அரசு ஊழியர் வர்க்கத்தின் உரிமைகளுக்காக எத்தகைய போராட்டத்திற்கும் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் இந்த இயக்கத்தின் நன்மைக்காகவும் அரசு ஊழியர் உரிமைகளை வென்றெடுப்பதிலும் உறுதியாக செயல்பட்டு வெற்றியை ஈட்டித்தருவார்கள் என்ற பெரு நம்பிக்கையோடு நான், வெற்றிக் கொடிகட்டும் என் பதாகையை இங்கே விட்டுச் செல்கிறேன்.

நான் இங்கே என் பதாகையை இறக்குகிறேன் என்பதால் நான் இத்துடன் என்னுடைய சமூக செயல்பாட்டை நிறுத்திக் கொண்டேன் என்பது அர்த்தமல்ல. என்னுடைய உடல்நலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு சமூக செயல்பாடுகளில் ஈடுபடக்கூடிய அளவுக்கு உடல் ஒத்துழைக்கும்போது கண்டிப்பாக சமூக மாற்றத்திற்கான வேறொரு தளத்தில் இருந்து கொண்டு, உரிமை மீட்புக்கான களத்தில் உங்களை நிச்சயம் சந்திப்பேன் உங்களோடு கைகோர்ப்பேன் என்ற நம்பிக்கையுடன் இந்தப் பதாகையை உங்களிடம் விட்டுச் செல்கிறேன்.

ஒருநாள் நான் குடையிடம் கேட்டேன்
"உனக்கு கவலை தரும் செயல் எது
மழையில் நனைவதா? வெயிலில் காய்வதா?"
குடை புன்னகைத்துப் பின் சொன்னது
"என் கவலை இதைப்பற்றியது அல்ல."
நான் மீண்டும் குடையிடம் கேட்டேன்
"பின் எதைப்பற்றியது உன் கவலை?"
குடை சொன்னது,
"எப்படிப்பட்ட பேய் மழையிலும்
என் மக்களை நனைய விடக்கூடாது
எப்படிப்பட்ட கடும் வெயிலிலும்
என் மக்களை காய விடக்கூடாது." ●

## மாநிலத் தலைவர் பொறுப்பில் இருந்து விடுவிப்பும் கூடுதல் பொறுப்புத் தலைவர் தேர்வும்

மாநிலத் தலைவர் தோழர் மு. அன்பரசு அவர்கள் உடல்நிலை, குடும்ப சூழ்நிலை காரணமாகவும், உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 19.08.2024 அன்று ஓய்வு பெறும் வகையில் தன்விருப்ப ஓய்வு விண்ணப்பத்தினை அளித்துள்ளார். அதனைத் தொடர்ந்து பொதுச் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சங்க பொறுப்புகள் அனைத்திலிருந்தும் விடுவித்துக்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும், பொருத்தமான ஸ்தாபன விதிகளின் அடிப்படையில் தனது பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்க வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

30.06.2024 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டத்தில் மாநிலத் தலைவர் தோழர் மு. அன்பரசு அவர்களின் வேண்டுகோளை ஏற்று அவரை மாநிலத் தலைவர் பொறுப்பிலிருந்து விடுவிப்பது எனவும், மாநிலச் செயலாளர் தோழர் சா. டானியல் ஜெயசிங் அவர்கள் மாநிலத் தலைவராக கூடுதல் பொறுப்பு வகிக்க முடிவெடுக்கப்பட்டது.

கவிதை

# ஆசையாய் ஒரு நாள்

**- கிருஷ்ணபிரியா**

அடித்து எழுப்பும்
அலாரம் இல்லா விழிப்பு...
கண் விழிக்கும் போது
கணவன் நீட்டும் காபி
நிதானமாய் அமர்ந்து
பேப்பர் படிக்க நேரம்...
பரபரப்பின்றி
பாடியபடியே குளியல்...
இறக்கை கட்டிக் கொள்ளாத
இன்முகச் சமையல்
யாரும் இடிக்காத
இதமான பேருந்துப் பயணம்...
எரிச்சலுடன் தள்ளப்படாத
அலுவலக வருகைப்பதிவேடு...
பதட்டமின்றி செய்ய வாய்க்கும்
பண்பான வேலை...
மல்லிகைப்பூ வாங்கியபடி
மாலை நேரம்
சொல்லாமலே படிக்கும்
சமர்த்துப் பிள்ளைகள்...
எல்லாரும் அமர்ந்து
இரவுச் சாப்பாடு
ஒரு மணி நேரமாவது
உறவாடும் புத்தகம்...
அவசரமில்லாமல்
அணைகின்ற விளக்கு
கனவுகளை விதைக்கின்ற
நிம்மதியான தூக்கம்...
என்றேனும் விடியும்
இப்படியும் ஒரு நாள்...



அஞ்சலி

## தோழர் பே. பேயத்தேவன்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தேனி மாவட்டத் தலைவரும் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவருமாகிய பே. பேயத்தேவன். 28.06.2024 அன்று உடல்நல குறைவால் இயற்கை எய்தினார்.

# ஜூலை 2 எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம்

**தஞ்சாவூர்**

தஞ்சை மாவட்டத்தில்; 11 வட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. தஞ்சை வடக்கு வட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் தோழர் சுப்பிரமணியன், தஞ்சை தெற்கு வட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் தோழர் சங்கர்கணேஷ், பூதலூர் வட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் தோழர் குமாரவேலு, திருவையாறு வட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் தோழர் வீரமணி, பாபநாசம் வட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட இணைச் செயலாளர் தோழர் தமிழ்வாணன், கும்பகோணம் வட்டத்தில் நடைபெற்ற ஆட்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் தோழர் வெங்கடேசன், திருவிடைமருதூர் வட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் தோழர் கண்ணன், ஒரத்தநாடு மற்றும் திருவோணம் வட்டத்தில் நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் தோழர் நாகராஜன், பட்டுக்கோட்டை வட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் அறிவழகன், பேராவூரணி வட்டத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட தலைவர் தோழர் நாவலரசன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில், மாவட்டத் தலைவர் (பொறுப்பு) தோழர் பா.முருகன், மாவட்டத் துணைத்தலைவர்கள் தோழர் தி.ரவிச்சந்திரன், தோழர் ஏ.ஆர்.கவிதா, மாவட்டச் செயலாளர் தோழர் ஆ.ரெங்கசாமி, மாவட்ட இணைச் செயலாளர்கள் தோழர்ஆ. செந்தில்குமார், தோழர் ஸ்ரீ.மகேஷ், மாநிலச் செயலாளர் தோழர் சா.கோதண்டபாணி மற்றும் முன்னாள் மாவட்டத்தலைவர் தோழர் சிவ. ரவிச்சந்திரன், முன்னாள் மாநில துணைத்தலைவர் தோழர் எஸ்.சிவக்குமார், முன்னாள் மாநில செயலாளர் தோழர் இரா.பன்னீர்செல்வம் மற்றும் பல்வேறு துறைவாரிச் சங்கங்களின் மாநில மாவட்ட வட்ட நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துரை மற்றும் சிறப்புரையாற்றினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதும் 390 ஆண்கள் மற்றும் 425 பெண்கள் என மொத்தம் 815 பேர் கலந்து கொண்டனர்.

**திண்டுக்கல்**

ஜூலை 2 எழுச்சி நாள் தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திண்டுக்கல் மாவட்டம் மையம் சார்பாக திண்டுக்கல் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வட்டச் செயலாளர் ராஜாமணி தலைமையில் ஜான் பாஸ்டின் டல்லஸ் தமிழ்நாடு வருவாய்த்துறை அமைச்சர் மாவட்ட தலைவர் வாழ்த்துரை வழங்க தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் முபாரக் அலி சிறப்புரையாற்ற வட்ட துணைத் தலைவர் துரைராஜ் நன்றி கூறினார் நத்தம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்ட துணைத் தலைவர் சுந்தரி தலைமையில் மாவட்ட செயலாளர் மா. சுகந்தி சிறப்புரையாற்ற அருணா ராணி நன்றி கூறினார் குஜிலியம்பாறை வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டத் துணைத் தலைவர் அழகு மயில் ராஜா தலைமை தாங்க வருவாய் துறை அலுவலர் சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவர் காளிமுத்து வாழ்த்துரை வழங்க காளி ரத்தினம் நன்றி கூறினார் வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்ட பொருளாளர் சுரேஷ் தலைமையில் மாவட்ட இணைச் செயலாளர் ஜெயபால் சிறப்புரையாற்ற வட்டச் செயலாளர் நந்தகோபால் கோரிக்கைகளை விளக்கி பேசினார் வட்ட இணைச் செயலாளர் சசிகுமார் நன்றி கூறினார் ஆத்தூர் தாலுகா அலுவலக முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டத் தலைவர் ராஜா தலைமையில் வட்ட செயலாளர் வெங்கடேசன் கோரிக்கைகளை விளக்கி பேசினார் மாவட்ட இணைச் செயலாளர் ராசாத்தி சிறப்புரையாற்றினார்

பட்ட பொருளாளர் சதீஷ்குமார் நன்றி கூறினார் ஒட்டன்சத்திரம் தாலுகா அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டத் தலைவர் ராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாடு சத்துணவு சங்க மாவட்ட இணை செயலாளர் ராணி வாழ்த்துரை வழங்கினார் வட்டச் செயலாளர் மணிமாறன் கோரிக்கைகள் விளக்கி பேசினார் மாவட்ட இணை செயலாளர் மகாராஜா சிறப்புரை ஆற்றினார் பட்ட பொருளாதார பரமேஸ்வரன் நன்றி கூறினார் பழனி தாலுகா அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டத் தலைவர் ராமசாமி தலைமையில் மாவட்ட பொருளாளர் குப்புசாமி சிறப்பு உரையாற்றினார் வட்ட செயலாளர் நாகராஜ் நன்றி கூறினார். நிலக்கோட்டை தாலுகா அலுவலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டத் தலைவர் முருகேசன் தலைமை தாங்கினார் தமிழ்நாடு வருவாய்துறை சார்ந்த மாவட்ட துணை தலைவர் பால குருநாதன் வாழ்த்துரை வழங்கினார் வட்ட பொருளாளர் காமராஜ் நன்றி கூறினார் திண்டுக்கல் கிழக்கு தாலுகா அலுவலக முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டத் தலைவர் பூசாரி தலைமையில் தமிழ்நாடு வருவாய்துறை அலுவலர் சங்க மாவட்ட துணை தலைவர் ரவிக்குமார் தொழிற்பயிற்சி அலுவலர் சங்க பொறுப்பாளர் காந்தி வாழ்த்துரை வழங்க மாவட்ட தலைவர் முபாரக் அலி சிறப்புரையாற்றினார். வட்டச் செயலாளர் முருக வள்ளி நன்றி கூறினார் திண்டுக்கல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டத் தலைவர் பூசாரி தலைமையில் வட்டச் செயலாளர் முருக வள்ளி கோரிக்கைகள் விளக்கிப் பேச நகராட்சி மாநகராட்சி அலுவலர் சங்க மாநில தலைவர் முருகானந்தம் மருத்துவத் துறை சங்கத் தலைவர் செல்வம் சத்துணவு ஊழியர் சங்க தலைவர் சந்தன பிரபு வாழ்த்துரை வழங்க மாவட்ட இணை செயலாளர் ஜெசி சிறப்புரையாற்ற வட்ட பொருளாளர் பாண்டி நன்றி கூறினார்

**கள்ளக்குறிச்சி**

ஜூலை 2 எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 6 இடங்களில் நடைபெற்றது.

கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட தலைவர் அன்பழகன் தலைமை தாங்கினார் மாவட்டத் தலைவர் அனந்த கிருஷ்ணன் முன்னிலையில் கோரிக்கைகள் தொடர்பாக மாவட்ட செயலாளர் மகாலிங்கம் விளக்கிப் பேசினார் இக்கூட்டத்தில் துணைத் தலைவர் வீரபத்திரன் தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின் மாவட்ட தலைவர் பிரபாகரன் தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் நல விடுதிகள் காப்பாளர் சங்க மாவட்ட தலைவர் சந்திரசேகரன் அனைத்து அடிப்படை பணியாளர்கள் சங்கம் மாநிலச் செயலாளர் காமராஜ் ஆகியோர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். சங்கராபுரம் வட்டக்கிளை சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்ட தலைவர் காஞ்சனா மேரி தலைமையில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட இணைச் செயலாளர் தேவதாஸ் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் ஜாகிர் உசேன் தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர் சங்க மாவட்ட துணைத்தலைவர் சரவணன் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட துணை தலைவர் தெய்வானை நெடுஞ்சாலைத்துறை மாநில செயற்குழு உறுப்பினர் ஜேம்ஸ் மருத்துவமனை பணியாளர் சங்க தலைவர் ராமஜெயம் தனசேகரன் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள். அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் ரவி கோரிக்கை விளக்கவுரை ஆற்றினார். மேனாள் மாநிலத் துணைத் தலைவர் தோழர் தங்கராசு கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். 6 இடங்களில் நடைபெற்ற எழுச்சி நாள் கருத்தரங்கில் 200க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் பங்கேற்றார்கள்.

**கிருஷ்ணகிரி**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின்படி தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு ஏமாற்றமளிக்கும் பட்ஜெட்டை கண்டித்தும், வாழ்வாதார கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தியும் தமிழ்நாடு முழுவதும் அனைத்து வட்டங்களிலும் மாபெரும் ஆர்ப்பட்டத்தை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் கிருட்டினகிரி மாவட்டத்தில் 02.07.2024

செவ்வாய்க்கிழமை ஓசூர், சூளகிரி, கிருஷ்ணகிரி, தேன்கனிக்கோட்டை, பர்கூர், ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய ஏழு வட்ட தலைநகரங்களில் உணவு இடைவேளையில் எழுச்சி நாள் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை மிக சக்தி மிக்க அளவில் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆர்பாட்டத்தில் வட்ட, மாவட்ட நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் மற்றும் துறைவாரி சங்க தலைவர்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மொத்தம் 110 பெண்கள் உட்பட 320 பேர் பங்கேற்றனர்.

**மதுரை**

மதுரை மாவட்டம் முழுவதும் அரசு அலுவலகங்கள் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது..மொத்தம் 64 அலுவலகங்களில் ஆண்கள் 876, பெண்கள் 696 என மொத்தம் 1572பேர் கலந்து கொண்டனர்....எழுச்சி நாள் ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்கிய மாநில மாவட்ட வட்டக்கிளை, துறைவாரிச்சங்க நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்ளுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம்....

**வட சென்னை**

வட சென்னை மாவட்டத்தில் குரலகம் ரிப்பன் மாளிகை வளாகம், அம்பதுர் ஐடிஐ, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வணிகவரி வளாகம், கன்னிமார நூலகவளாகம், ஸ்டான்லி மருத்துவமனை ஆகிய 7 மையங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் 476 பேர் கலந்து கொண்டனர் சரிபாதியாக பெண்கள் கலந்து கொண்டார்கள் 192 பெண்கள் இதில் பங்கேற்றுக் கொண்டார்கள் ஊழியர் மத்தியில் ஒரு எழுச்சியான உணர்வு என்பது இருக்கிறது இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட நிர்வாகிகள் விஜயகுமாரன் அந்தோணிசாமி மகேந்திரன் விவேகானந்தன் வேலு ஏழுமலை ஆகியோர் பங்கேற்றனர் மாநில பொறுப்புத் தலைவர் தோழர் டானியல் ஜெய் சிங் அவர்களும் மாநில செயலாளர் அண்ணா குபேரன் அவர்களும் எழுச்சி உரையாற்றினார்கள்.

**திருச்சிராப்பள்ளி**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி-1 (திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி-2 (முதன்மை செயற்பொறியாளர் நெடுஞ்சாலை அலுவலகம்), திருவெறும்பூர், மணப்பாறை, மருங்காபுரி, முசிறி, தொட்டியம் மற்றும் துறையூர் ஆகிய வட்டக்கிளைகளில் ஆர்ப்பாட்டம் எழுச்சியோடு நடைபெற்றது. இதில் அனைத்து துறை ஊழியர்களும் திரளாக கலந்து கொண்டார்கள்.

**திருவாரூர்**

திருவாரூர் மாவட்டத்தின் 9 வட்டக்கிளைகளின் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது அனைத்து வட்டக்கிளை நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் துறை வாரிச்சங்க மாவட்ட ,வட்டக்கிளை நிர்வாகிகள் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர். திருவாரூர் வட்ட கிளையின் சார்பாக மாவட்ட ஆட்சியர் வளாகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாநிலச் செயலாளர் தோழர் குரு சந்திரசேகரன் அவர்கள் துவக்கரையாற்றினர். மாவட்டத் தலைவர் தோழர் எஸ்.செங்குட்டுவன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் தோழர் செ. பிரகாஷ் நிறைவுறையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் நா. தம்பிதுரை, மாவட்ட நிர்வாகிகள் பி. விஜயன், பி மகாலிங்கம் கலந்து கொண்டனர். வட்ட பொருளாளர் கோபிநாத் நன்றியுரை கூறினார்

**விருதுநகர்**

விருதுநகர் மாவட்டத்தில் விருநகர் வட்டக்கிளை சார்பாக மாவட்ட அடசியர் அலுவலக வளாக முன்பாக மாலை 5 மணியளவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டக்கிளைத் தலைவர் தோழர் ஆர். போத்திராஜ் தலைமை வகித்தார். தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் தோழர் செல்வகணேஷ், மாவட்டச்செயலாளர், தோழர் அல்லாபிச்சை, ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு நகராட்சி, மாநகராட்சி அனைத்து சங்க கூட்டமைப்பு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாவட்ட இணைச்செயலாளர் தோழர் என்.முருகானந்தம், தோழர் எஸ். மணிமாலாபாண்டியன், மாவட்ட மகளிர்

துணைக்குகு அமைப்பாளர் தோழர் என். சரோஜினி தேவி ஆகியோர் பங்கேற்றனர். மாவட்டச் செயலாளர் தோழர் கா. கருப்பையா நிறைவுரையாற்றினார். தோழர் அப்துல்லா அவர்கள் கலந்துக்கொண்ட வட்டக்கிளை நிர்வாகிகளுக்கும் , துறைவாரி சங்க நிர்வாகிகளுக்கும் மற்றும் முன்னணி ஊழியர்களுக்கும் நன்றி கூறினார்.

**தென்சென்னை**

எழுச்சி தின ஆர்ப்பாட்டம் தென்சென்னை மாவட்டம்

**1. சேப்பாக்கம்** எழிலகம் வளாகத்தில் நடைபெற்றது தலைமை ஆனந்தன் பகுதி பொருளாளர் கோரிக்கை விளக்கவுரை அருள் டேனியல் மாவட்டத் துணைத் தலைவர் வாழ்த்துரை உமா சங்கர் ஆதிதிராவிடர் நலத்துறை ஊழியர் சங்கம் ராமஜெயம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஊழியர் சங்கம் ஆர்ப்பாட்டக் கண்டன உரை தோழர் டேனியல் ஜெய்சிங் மாநில தலைவர் (பொ) நன்றியுரை கண்ணன் உணவுப் பொருள் வழங்கல் துறை கலந்து கொண்டோர் ஆண்கள் -85 பெண்கள்-72

**2. DPI பகுதி** கிரீம்ஸ் ரோடு வணிகவரித்துறை வளாகத்தில் நடைபெற்றது

தலைமை ரவி ராஜ் மாவட்ட இணை செயலாளர் ஆர்ப்பாட்டக் கண்டன உரை தோழர் டேனியல் ஜெய் சிங் மாநில தலைவர் பொறுப்பு நன்றியுரை சுமதி பகுதிக்குழு கலந்து கொண்டோர் ஆண்கள்-75 பெண்கள்-65

**3. கிண்டி தாம்பரம் பகுதி** கிண்டி ஐடிஐ வளாகத்தில் நடைபெற்றது.

தலைமை பாரி வள்ளல் பகுதி தலைவர் ஆர்ப்பாட்டக் கண்டன உரை கார்த்திகேயன் வேலை வாய்ப்பு ஊழியர் சங்க மாநில பொருளாளர் அமரேசன் பகுதி பொருளாளர் ஹரிஹரன் பகுதி செயலாளர் சாலக்குமார் மாவட்டத் துணைத் தலைவர் நன்றியுரை தட்சணாமூர்த்தி பகுதி குழு கலந்து கொண்டோர் ஆண்கள்-52பெண்கள்-38

**4. சைதை நந்தனம் பகுதி** வேளாண்மை பொறியியல் துறை வளாகத்தில் நடைபெற்றது தலைமை புயலி பகுதி தலைவர் வாழ்த்துரை வெங்கடேசன் தலைமைச் செயலக சங்கம் ஆர்ப்பாட்டக் கண்டன உரை சுமதி மாநில துணைத்தலைவர் நன்றியுரை தியாகு பகுதி பொருளாளர் கலந்து கொண்டோர் ஆண்கள்-27பெண்கள்-35

**மயிலாடுதுறை**

ஜூலை 02 எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் மாநில செயற்குழு முடிவின் அடிப்படையில் மயிலாடுதுறை, குத்தாலம், சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டக் கிளைகளில் நடைபெற்றது. மதியம் 01.30 மணிக்கு உணவு இடைவேளையில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டப் பொருளாளர் தோழர் R.கலா தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் தோழர் D.இளவரசன் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். TNGPA மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் L.பிரேம்சந்திரன், JAC பொதுச் செயலாளர் தோழர் T.ராயர் மற்றும் த.மு.எ.க.ச மாவட்டச் செயலாளர் தோழர் P.பாலசுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட இணைச் செயலாளர் தோழர் D.சிங்காரவேல் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல் படுத்துதல் உள்ளிட்ட தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றிட வலியுறுத்தி முழக்கமிடப்பட்டது.

**தென்காசி மாவட்டம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவின் படி தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு ஏமாற்றமளிக்கும் பட்ஜெட்டை கண்டித்தும் , பழைய பென்ஷன் உள்ளிட்ட தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் 02.07.24 அன்று உணவு இடைவேளை,மாலைநேரம் தென்காசி மாவட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலகம் முன்பு மாபெரும் ஆர்ப்பாட்டம் மிக எழுச்சியாக நடைபெற்றது.

1. தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
2. தென்காசி ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
3. செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம்

4. ஆலங்குளம் வட்டாட்சியர் அலுவலகம்
5. கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம்
6. சிவகிரி வட்டாட்சியர் அலுவலகம்
7. சங்கரன்கோவில் வட்டாட்சியர் அலுவலகம்
8. திருவேங்கடம் வட்டாட்சியர் அலுவலகம்

போராட்டத்தில் 50 பெண்கள் உட்பட 400 தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருப்பூர்**

மாண்புமிகு தமிழக முதல்வரின் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றக்கேட்டு மாபெரும் கோரிக்கை ஆர்ப்பாட்டம் நாள் : 02.07.2024 செவ்வாய்க்கிழமை மதிய உணவு இடைவேளையின் போது மற்றும் மாலை நேரம் ஒன்பது வட்டக்கிளையில் எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் மிகவும் சக்திவாய்ந்த போராட்டமாக நடைபெற்றது

1) திருப்பூர் தெற்கு வட்ட கிளை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 30 +25 தோழர்கள் பங்கேற்றனர்.

2) திருப்பூர் வடக்கு வட்ட கிளை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 28 தோழர்கள் பங்கேற்றனர்.

3) உடுமலைப்பேட்டை வட்ட கிளை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.... 58 தோழர்கள் பங்கேற்றனர்.

4) தாராபுரம் வட்டக் கிளையில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 54 தோழர்கள் பங்கேற்றனர்.

5) காங்கேயம் வட்ட கிளையில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 30 தோழர்கள் பங்கேற்றனர்.

6) மடத்துக்குளம் வட்ட கிளையில் மடத்துக்குளம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 50 தோழர்கள் பங்கேற்றனர்.

7) பல்லடம் வட்ட கிளையில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.... 25 தோழர்கள் பங்கேற்றனர்.

8) அவிநாசி வட்ட கிளையில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது... 20 தோழர்கள் பங்கேற்றனர் .

9) ஊத்துக்குளி வட்ட கிளை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 20 தோழர்கள் பங்கேற்றனர் . தோழர்களே நடைபெற்ற மாவட்டம் முழுவதும் ஒன்பது வட்டக்கிளையில் ஒன்பது வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மொத்தம் -10 இடங்களில் எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் மிகவும் சக்தி வாய்ந்த ஆர்ப்பாட்டமாக நடைபெற்றுள்ளது பங்கேற்ற மாநில நிர்வாகி ,மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள், துறை வாரி சங்க நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள், அனைத்து துறை ஓய்வூதியர் சங்க நிர்வாகிகள், உட்பட அரசு ஊழியர்கள் பெண்கள் 70- ஆண்கள் -270 மொத்தம் -340

**விழுப்புரம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில செயற்குழு முடிவின் அடிப்படையில் ஜூலை 2 அன்று எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு முதல்வரின் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றிட வலியுறுத்தி விழுப்புரம் மாவட்டத்தில் வட்ட நிர்வாகிகள் ஜெயந்தி (மேல்மலையனூர்) வெ சுரேஷ்குமார் (செஞ்சி) எஸ்.பாலமுருகன் (திருவெண்ணைநல்லூர்) முருகன் (வானூர்) ர.சுதாகர் (கண்டாச்சிபுரம்) தணிக்கைவேல் (விக்கிரவாண்டி) மற்றும் தோழர் விஜயகுமார் (திண்டிவனம்) ஆகியோர் தலைமையில் ஏழு வட்டக்கிளைகளில் 147 ஆண்கள் மற்றும் 144 பெண்கள் உட்பட 296 தோழர்களது பங்கேற்புடன் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொருளாளர் தோழர் க.அன்பழகன் மாவட்ட துணை தலைவர்கள் தோழர்கள் ஜெ. ஜெய்சங்கர் வீ.நடராஜன் தி.ஜெயந்தி உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகளும் டாம்சா முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் தோழர் ஆ.ஜா. பார்த்தீபன் ஆகியோர் பங்கேற்று கோரிக்கைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார்கள். தோழமை சங்க நிர்வாகிகள் ஜெ.ரமேஷ் (TNRDOA), பி.சத்யா, அ.உமா (TNNMEA) உள்ளிட்ட ஊரக வளர்ச்சி துறை,

வருவாய்த்துறை, வேளாண்மைத் துறை, சத்துணவு, வணிகவரி, மருத்துவத்துறை மற்றும் புள்ளிஇயல் துறை சார்ந்த பலரும் எழுச்சியுடன் பங்கேற்று கோரிக்கை முழக்கமிட்டனர்.

**சேலம்**

சேலம் மாவட்டத்தில் சேலம் நகர வட்ட கிளை, மேற்கு வட்ட கிளை, தெற்கு வட்ட கிளை, மேட்டூர் வட்டக் கிளை, ஓமலூர் வட்டக்கிளை, எடப்பாடி வட்டக்கிளை, சங்ககிரி வட்டகிளை, ஆத்தூர் வட்டக்கிளை, கெங்கவல்லி வட்ட கிளை, வாழப்பாடி வட்டக்கிளை, ஏற்காடு வட்டக்கிளை, ஆகிய 11 கிளைகளில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பங்கேற்பு ஆண்கள் 260 மகளிர் 126 மொத்தம் 386.

**நீலகிரி**

அரசு ஊழியர் சங்க மாநில செயற்குழு முடிவின்படி நீலகிரி மாவட்டத்தில் உதகையில் மாவட்ட செயலாளர் தோழர் அ.அற்புதராஜ் ரூஸ்வெல்ட் தலைமையிலும், கூடலூர் வட்டத்தில் வட்டத்தலைவர் தோழர் போஜன் தலைமையிலும் எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது... இவ்விரு ஆர்ப்பாட்டங்களிலும் வேளாண் அமைச்சுப்பணியாளர் சங்க மாநில பொதுச்செயலர் தோழர் முத்துக்குமார் அவர்களும் அனைத்து துறை ஓய்வூதியர் சங்க நிர்வாகிகள் தோழர் விஷ்ணுதாஸ், தோழர் சந்திரபோஸ் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர். வட்ட நிர்வாகிகள் தோழர்கள் நெடுஞ்சாலைத்துறை சுரேஷ், ஆதிதிராவிடர் நலத்துறை விடுதி குணசேகரன், சிவபெருமாள் ஆகியோர் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர் இவ்விரு வட்டங்களிலும் 60 க்கு மேற்பட்ட முன்னனி உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு உரிமை முழக்கமிட்டனர்.

**வேலூர்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு முடிவிற்கிணங்க ஜூலை 2 எழுச்சி தினத்தில் எழுச்சி கொள்வோம்! கோரிக்கை ஆர்ப்பாட்டம் வேலூர் மாவட்டத்தில் 1) வேலூர் வட்டாட்சியர் தெற்கு அலுவலகம் 2)வேலூர் வடக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 3) பேரணாம்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் 4)கே வி குப்பம் வட்டாட்சியர் அலுவலகம் 5) குடியாத்தம் வட்டாட்சியர் அலுவலகம் 6) அணைக்கட்டு வட்டாட்சியர் அலுவலகம் 7) காட்பாடி வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய ஏழு மையங்களில் நடைபெற்றது 345 அரசு ஊழியர்கள் பங்கேற்றனர் பெண்கள் 50 ஆண்கள் 295 மொத்தம் 345 என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்

**காஞ்சிபுரம்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் காஞ்சிபுரம் மாவட்டம் ஜூலை 02 எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம் தேர்தல் கால வாக்குறுதியை தமிழக முதல்வர் நிறைவேற்ற கோரி காஞ்சிபுரம் வட்டக்கிளை சார்பில் எழுச்சியாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

**தருமபுரி**

தருமபுரியில் தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற கோரி அரசு ஊழியர் சங்க ஆர்ப்பாட்டம் தருமபுரி ஜூலை -2, தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் தருமபுரி மாவட்டம் முழுவதும் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைபடுத்திட வேண்டும். 21- மாத கால ஊதிய மாற்ற நிலுவைத் தொகை முடக்கப்பட்ட அகவிலைப்படி, பறிக்கப்பட்ட சரண்டர் உள்ளிட்ட உரிமைகளை வழங்கிட வேண்டும்.சத்துணவு மற்றும் அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர், ஊர்ப்புற நூலகர், எம்.ஆர்.பி செவிலியர் உள்ளிட்டவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

சாலைப் பணியாளர்களின் 41-மாத பணி நீக்க காலத்தை பணிக் காலமாக முறைப்படுத்த வேண்டும்.அரசுத் துறைகளில் உள்ள காலிப்பணியிடங்கள் அனைத்தையும் காலமுறை ஊதியத்தில் நிரப்பிட வேண்டும். கருணை அடிப்படையில் பணி நியமனம் 25 சதம் வழங்கப்பட்டு வந்ததை 5 சதமாக குறைத்ததனை திரும்ப பெற வேண்டும்.

சத்துணவு திட்டத்தில் பணியாற்றி இறந்தோரின் ஆண் வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க வேண்டும்.அரசு அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பணிப்பலுவை குறைத்திட வேண்டும். அலுவலக பணிநேரத்திற்கு பின்பும் அரசு விடுமுறை நாட்களிலும் நடத்தப்பட்டு வரும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதனை தவிர்த்திட வேண்டும்.

முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அனைத்து பள்ளிகளுக்கும் விரிவு படுத்த வேண்டும். சத்துணவு ஊழியர்களைக் கொண்டு சத்துணவு மையங்கள் மூலம் அமுல்படுத்த வேண்டும்.உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பென்னாகரத்தில் வட்ட தலைவர் திம்மராயன் தலைமைவகித்தார். மாவட்ட தலைவர் எம். சுருளிநாதன் சிறப்புறையாற்றினார். நல்லம்பள்ளியில் வட்டசெயலாளர் முருகன் தலைமைவகித்தார்.முன்னாள் துணைத்தலைவர் சி.காவேரி ஆர்.மதலைமுத்து, ஆகியோர் பேசினர். காரிமங்கலதில் வட்ட தலைவர் தேவகி தலைமைவகித்தார். மாவட்ட செயலாளர் ஏ.தெய்வானை முன்னாள் மாவட்ட செயலாளர் ஏ.சேகர் ஆகியோர் பேசினர். பாப்பிரெட்டப்பட்டியில் மாவட்ட பொருளாளர் அன்பழகன் தலைமைவகித்தார்.மாவட்ட இணைசெயலாளர் கிருஷ்ணமூர்த்தி பேசினார்.அரூரில் வட்ட தலைவர் ரமேஷ் தலைமைவகித்தார்.வட்ட செயலாளர் சி.அழகிரி பேசினார். பாலக்கோட்டில் வட்ட தலைவர் மானிக்கம் தலைமைவகித்தார்.மாவட்ட நிர்வாகிகள் குணசேகரன் ராமகிருஷ்ண ஆகியோர் பேசினார். தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ஏ.தெய்வானை முன்னாள் மாவட்ட செயலாளர் ஏ.சேகர் ஜாக்டோ ஜியோ மாவட்ட நிதிகாப்பாளர் கே.புகழேந்தி , மாநிலசெயற்குழு உறுப்பினர் முருகன்,ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட தலைவர் முகமது இலியாஸ்,வட்ட செயலாளர் ஸ்ரீநாத், வேளாண்மை அமைச்சுத்துறை பணியாளர் சங்க மாவட்ட தலைவர் ஜெயவேல் சத்துணவு ஊழியர் சங்க முன்னாள் மாவட்டசெயலாளர் சி.காவேரி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிபேசினர்.

**திருப்பூர்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருப்பூர் மாவட்டம் மையத்தின் சார்பாக மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்ற ஊழியர்களுக்கு, சிகிச்சைக்குரிய கட்டணம் ஒதுக்கீடு செய்வதில் குளறுபடி நிலவுவதைக் கண்டித்தும், குறைந்த தொகையை வழங்கிவிட்டு ,மிகப் பெரும் தொகையை வழங்க மறுப்பதை சரி செய்யவும், திட்டத்தில் உள்ள குளறுபடிகளை சரி செய்ய வேண்டும். கட்டணம் இல்லா சிகிச்சையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியும் போராட்டம் நடத்தப்பட்டது.

மாவட்ட தலைவர் ஆ.ராணி,மாவட்டச் செயலாளர் மா.பாலசுப்பிரமணியன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்ட இந்தப் போராட்டத்தின் விளைவாகயுனைடெட் இன்சூரன்ஸ் கம்பெனி மேலாளர் மற்றும் மெடி அசிஸ்ட் மேலாளர் ஆகியோரோடு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

இதன் பலனாக பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தரப்பில் இருந்து முறையீடுகள், சிகிச்சைகுரிய கட்டண ரசீதுகளுடன் விண்ணப்பம் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட ஊழியர் அங்கன்வாடி பணியாளர். திருமதி கஸ்தூரி முருகன் அவர்களுக்கு சிகிச்சைக்கு செலுத்திய கட்டணம் ரூ1,55,382 இல் ரூ1,27,980 கிடைக்க பெற்றுள்ளது . இது, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருப்பூர் மாவட்டம் மையம் முன்னெடுத்த போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி. தொடர்ச்சியாக அநீதிக்கு எதிராக போராடி உரிமைகளை வெல்ல ஆயத்தமாவோம்!

**நாகப்பட்டினம்**

மாநில செயற்குழு முடிவின்படி ஜூலை 2 எழுச்சி நாளை முன்னிட்டு நாகப்பட்டினம், வேதாரண்யம் மற்றும் கீழ்வேளூர் வட்ட மையங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாகப்பட்டினத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டச் செயலாளர் கே.இரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் பா.ராணி, மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன்சேரல், அனைத்து மருந்தாளுநர் சங்க பொதுச்செயலாளர் சண்முகம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். வேதாரண்யத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டச் செயலாளர் ஆர். பி.வேல்கண்ணன் தலைமை தாங்கினார். மாவட்ட நிர்வாகிகள் ப.அந்துவன்சேரல், செந்தமிழ் செல்வி மற்றும் ஓய்வூதியர் சங்கத் தலைவர் வி.எஸ்.இராமமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கீழ்வேளூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட நிர்வாகி பத்மநாபன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் அ.தி. அன்பழகன், மாநில செயற்குழு உறுப்பினர் வளர்மாலா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். வட்ட நிர்வாகி சண்முகநாதன் நன்றியுரையாற்றினார். மொத்தம் 60 பெண்கள் உட்பட 90 ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். - அ.தி.அன்பழகன், மாவட்டச் செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், நாகப்பட்டினம்.

**திருவண்ணாமலை**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாநில செயற்குழு முடிவின படி ஜூலை 2 எழுச்சி நாளில் ஆர்ப்பாட்டம் திருவண்ணாமலை மாவட்டத்தில் 13 வட்ட கிளைகளில் 13 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது திருவண்ணாமலை தெற்கு கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டக் கிளை தலைவர் தோழர்.மகாதேவன் தலைமை தாங்கினார். மாநில பொருளாளர் தோழர். மு. பாஸ்கரன் சிறப்புரையாற்றினார். கோரிக்கைகள் குறித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் பார்த்திபன் மாவட்ட செயலாளர் தோழர் பிரபு தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட செயலாளர் ரகுபதி தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட செயலாளர் திரு பச்சையப்பன் மாநில செயலாளர் C.சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்றனர். திருவண்ணாமலை வடக்கு கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கிளை தலைவர் தோழர் முரளி தலைமை தாங்கினார் அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் பார்த்திபன் கோரிக்கை தொடர்பாக விளக்கி பேசினார் மாவட்ட இணை செயலாளர் தோழர். மா.மணி உள்ளிட்ட திரளாக தோழர்கள் பங்கேற்றனர். கீழ்பென்னாத்தூர் வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்ட கிளை தலைவர் தோழர். மா. பரிதிமால் கலைஞன் தலைமை தாங்கினார். மாவட்ட துணைத்தலைவர் அண்ணாதுரை கோரிக்கைகள் குறித்து விளக்கி பேசினார். தண்டராம்பட்டு வட்டக் கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டக் கிளை தலைவர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். திரளாக தோழர்கள் கலந்து கொண்டனர். செங்கோட்டை கிளையில் கிளை செயலாளர் தோழர் ராஜேந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கலசப்பாக்கம் வட்ட கிளையில் இரு இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கிளை தலைவர் தோழர். கா.ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாவட்ட இணை செயலாளர் தோழர். கோ. அண்ணாமலை கோரிக்கைகள் குறித்து விளக்கிப் பேசினார். செய்யாறு வட்ட கிளையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டக்கிளை தலைவர் தோழர்.இல.பாஸ்கர் தலைமை தாங்கினார். மாவட்ட துணைத்தலைவர் தோழர்.கோ.ஸ்ரீதர் கோரிக்கைகள் குறித்து விளக்கி பேசினார். கிளை செயலாளர் தோழர்.குப்புசாமி உதயகுமார், பார்த்தசாரதி, முரளி, ராஜசேகரன் உள்ளிட்ட திரளாக தோழர்கள் பங்கேற்றனர். ஆரணியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டக்கிளை தலைவர் தோழர்.இல. பாஸ்கர் தலைமை தாங்கினார். பரசுராமன் விஜயகுமார் தென்னரசு ஆனந்த் உள்ளிட்ட திரளாக தோழர்கள் பங்கேற்றனர். போளூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வட்டக் கிளை தலைவர் தோழர். பிச்சாண்டி தலைமை தாங்கினார். வந்தவாசி வட்டக் கிளையில் பெரணமல்லூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டக்கிளை செயலாளர் தோழர்.வெ.குமார், தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் தோழர் கோரிக்கைகள் குறித்து பேசினார் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில பொருளாளர்

தோழர். மு.பாஸ்கரன் சிறப்புரையாற்றினார். தோழர்.ஜோதிபிரகாஷ், பரமேஸ்வரன் குப்புசாமி, முன்னாள் வட்டக் கிளை தலைவர் ஏ.பி வெங்கடேசன் உள்ளிட்ட திரளாக தோழர்கள் கலந்து கொண்டனர். வெம்பாக்கம் வட்டக் கிளையில் கிளை செயலாளர் தோழர் ஞானசேகரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது திரளான தோழர்கள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி எழுச்சி நாள் கருத்தரங்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஜூலை 2 2003 எழுச்சி நாள் தினத்தை சிறப்பிக்கும் வகையில் கிருஷ்ணகிரி மாவட்ட மையத்தின் சார்பில் எழுச்சி நாள் கருத்தரங்கம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டு ஜூலை 2.2024 அன்று, கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க கட்டடத்தில் மாலை 3 மணி அளவில் இந்த எழுச்சி நாள் சிறப்பு கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கிற்கு மாவட்ட தலைவர் தோழர். பி.சந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார், மாவட்ட செயலாளர் தோழர் சி.கல்யாணசுந்தரம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் தோழர். கோ.பழனியம்மாள் அவர்கள் "தடைகளை தகர்த்து சாகசங்களை நிகழ்த்துவோம்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேனாள் மாநில தணிக்கையாளர் தோழர் ஆர்.நடராஜன் அவர்கள் "பட்டினிக்கும் அஞ்சிடோம், நெஞ்சை பிளந்தபோதும் நீதி



கேட்க அஞ்சிடோம்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். இக்கருத்தரங்கில் அனைத்து வட்ட கிளைகளில் இருந்தும், அனைத்து துறைகளிலிருந்தும், வட்ட, மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்போடு பெருவாரியான தோழர்கள் பங்கேற்று கருத்தரங்கை சிறப்பித்தனர். கருத்தரங்கின் சிறப்பென கருதப்படுவது பங்கேற்ற தோழர்களின் மொத்த எண்ணிக்கையில் 99 சதவீதத்தினர் புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் பணிபுரிகின்றவர்கள். மொத்தம் 28 பெண்கள் உட்பட 70 பேர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். இறுதியாக மாவட்ட பொருளாளர் தோழர் எம். நந்தகுமார் அவர்கள் நன்றி கூறி கருத்தரங்கை நிறைவு செய்தார்.

**திருப்பத்தூர்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முடிவிற்கிணங்க, இன்று 02.07.2024 திருப்பத்தூர் மாவட்ட வருவாய்த்துறை சங்க, வாணியம்பாடி வட்டகிளை சார்பாக, வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக 1.பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்த கோருதல் 2.ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு மற்றும் 3.எட்டு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு மாநில அரசு ஊழியர் சங்க திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் மற்றும் வருவாய்த்துறை சங்கத்தலைவர் தோழர்.திரு அருள்மொழிவர்மன் அவர்கள் தலைமையில் மாலை 5.30 மணியிலிருந்து 5.50 வரை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சுமார் 30 அரசு ஊழியர்கள் (ஆண்கள்-23, பெண்கள்-07) கலந்து கொண்டனர். மேலும் திருப்பத்தூர் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் சங்க பொருளாளர் தோழர் திரு.சிவகுமார் நன்றி தெரிவிக்க ஆர்பாட்டம் முடிவுற்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## பயிற்சி வகுப்பு - திண்டுக்கல்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திண்டுக்கல் மாவட்ட மையத்தின் சார்பாக 6.7.24 அன்று"சங்கம் நமக்கு என்ன செய்தது நாம் சங்கத்திற்கு என்ன செய்ய வேண்டும்"என்ற தலைப்பில் தோழர் வெங்கடேசன் மாநில துணைப் பொதுச் செயலாளர் TNGEA



அவர்களின் பயிற்சி வகுப்பு தலைமை முபாரக் அலி மாவட்ட தலைவர் வரவேற்புரை சுகந்தி மாவட்ட செயலாளர் நன்றியுரை குப்புசாமி மாவட்ட பொருளாளர் அனைத்து துறைகளிலும் இருந்து 128 பேர் பங்கேற்றனர்


## வாசகர் கடிதம்

- ம.அந்தோணிசாமி.

ஜூன் மாத இதழ் அனைத்து உள்ளடக்க கருத்துக்களும் சிறப்பாக அமைந்துள்ளது. நீண்ட மாதங்களுக்கு பிறகு மாவட்ட செய்திகள் வெளிவந்துள்ளது ஆசிரியர் குழுவிற்கு பாராட்டுக்கள். தலைவர் மடல் கூறிய கருத்தும் பொதுச்செயலாளர் மேசையிலிருந்து கட்டுரையும் புதிய சூழலில் நடைபெறும் அரசியல் நிகழ்வுகளை ஊழியர்கள் புரிந்து கொள்ள உதவுகின்றது. மு. பாஸ்கரன் அவர்களின் கட்டுரை வரும் காலங்களில் தமிழ்நாடு ஆபத்தை எதிர்நோக்குகிறது என்பதை எச்சரிக்கை செய்துள்ளது. கிருஷ்ண பிரியா அவர்களின் கவிதை உள்ளபடியே பொருள் பொதிந்த கவிதை .நமது இதழில் வெளிவந்தமைக்கு பாராட்டுக்கள் ஆசிரியர் குழு ஆன் ஆதிக்க சிந்தணையை சிதைக்கும் கருத்துக்களை ஒவ்வொரு இதழிலும் வெளியிட வேண்டும்.

தெ.வாசுகி அவர்களின் கட்டுரை எனது சிறு வயது பிராயத்தில் மூழ்கடிக்க வைத்தது. கொள்ளையடித்தவன் கூட்டத்தில் இருப்பான் கண்டுபிடி எவ்வளவு அறிவு கூர்மையை வளர்க்கும் சிறப்பான விளையாட்டு அந்த அறிவு நமது அமைப்பிற்கு கூடுதலாக தேவைப்படுகிறது. இரா மங்களபாண்டியன் அவர்களின் கட்டுரைமாநில சுயாட்சி குறித்த புரிதலை உருவாக்கியுள்ளது வாசித்த அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது மொத்தத்தில் பாராட்டத்தக்க உள்ளடக்கம் தொடரட்டும்.

## நூல் அறிமுகம்



தோடர் ஓட்டம்
டி.கே.ரங்கராஜன்
சுயசரிதை
வெளியீடு:
பாரதி புத்தகலாயம்

தொடர் ஓட்டம், டிகே ரங்கராஜன், சுயசரிதை நூலினை முதல் மூன்று பகுதிகளை வாசித்தேன் நமது சங்கத்திற்கு புதிய ஊழியர்களை எவ்வாறு சங்க பணி செய்ய அழைப்பது தொடர்ந்து அவர்களை சங்கப் பணியாற்ற வைப்பது போன்ற கேள்விகளுக்கு பதிலாக பல்வேறு நிகழ்வுகள் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கத்தை பாதுகாப்பது, சங்க அலுவலகங்களை, பாதுகாப்பது பராமரிப்பது, நிதி திரட்டுவது, அதனை முறையாக செலவு செய்வது போன்ற பணிகளை செய்திட புதிய நிர்வாகிகளுக்கு நல்ல வழிகாட்டியாக இந்த நூல் அமையும் என உறுதியாக நம்புகிறேன். இந்நூலை ஒவ்வொரு தோழரும் படிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். சரியான காலகட்டத்தில் சங்க வளர்ச்சிக்கும் சங்க பாதுகாப்புக்கும் குறிப்பாக அடுத்த தலைமுறை மாற்றத்திற்கும் வழிகாட்டும் நூலாக அமைந்துள்ளது மாநில செயற்குழு இந்த நூலை பெற்று வழங்கியதற்கு பாராட்டுக்கள். ம. அந்தோணிசாமி மாவட்ட செயலாளர் வடசென்னை மாவட்டம். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# ஜூலை 2 – எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம்



மயிலாடுதுறை


நீலகிரி



கன்னியாகுமரி



இராமநாதபுரம்



தஞ்சாவூர்



நாமக்கல்



புதுக்கோட்டை



தருமபுரி



விருதுநகர்


விழுப்புரம்


காஞ்சிபுரம்



கள்ளக்குறிச்சி

Registered Postal Registration No. TN/CH/(C)/200/2024-2026 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2024-2026 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.07.2024

# ஜூலை 2 – எழுச்சி நாள் ஆர்ப்பாட்டம்


திருவள்ளூர்


திருவண்ணாமலை



கடலூர்


நாகை



நெல்லை


சிவகங்கை


வேலூர்



திருவாரூர்



மதுரை


கிருஷ்ணகிரி



Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com